திவ்யார்த்த தீபிகை

18.10.1937.

12 7

JL
Q22m211,N26
N37.12.7
159926

1140

24

160

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்,

மாதந்தோறும் வெளிவரும்

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய ப்ரகாசந பத்திரிகை.

ஸம்புடம் 12] [நெம்பர் 7.

திவ்யார்த்த தீபிகை.

ஆசிரியர் :

ஸ்ரீகாஞ்சீ. ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர்.

18—10—1937

விஷயஸூசிகை.

1. திருவாய்மொழி உரை 4 பாரம்.

2. ஆசார்யஹ்ருதயஸாரம் 1 பாரம்.

சென்னை நியூமன் அச்சுக்கூடம்.

விலை அணா 5] 1937 [தபால் சார்ஜ் தனி

கிடைக்குமிடம்;— புரோப்ரைடர்,

நியூமன் பிரஸ், டேவிட்ஸன் தெரு, மதராஸ்.

Printed & Published by T. Narayanaswami Naidu at Newman Press, 19, Davidson St., Madras.

வேயின்மலிபுரைதோளி பின்னைக்குமணாளனை * 160.
ஆயபெரும்புகழ் எல்லையிலாதனபாடிப்போய் *
காயம்கழித்து அவன்தாளிணைக்கீழ்ப்புகும்காதலன் *
மாயமனிசரை என்சொல்லவல்லேன்என்வாய்கொண்டே. (அ)

வேயின் மலி புரை தோளி	மூங்கிலைக் காட்டிலும் சிறந்து விளங்குகின்ற தோள்களையுடையவளான
பின்னைக்கு	நப்பின்னைப் பிராட்டிக்கு
மணாளனை	மணவாளனான கண்ணபிரானைக் குறித்து
எல்லை இலாதன	நிரவதிகமாயும்
ஆய	ஆராய்தற்கு உரியனவுமான
பெரும் புகழ்	பெரிய கீர்த்திகளை
பாடி	கவிபாடி
போய்	நெடுங்காலம் நடந்து

காயம் கழித்து	இவ்வுடலையொழித்து
அவன் தாளிணை கீழ்	அவ்வெம்பெருமானது திருவடியிணையில்
புகும் காதலன்	அங்கேயிருக்க வேணுமென்கிற ஆசையையுடைய நான்
மாயம் மனிசரை	[illegible]ருதர்களான மனிசர்களை
என் வாய் கொண்டு	(எம்பெருமானையே துதிக்கக் கண்ட) எனது வாக்கைக் கொண்டு
என் சொல்ல வல்லேன்	என்ன கவி பாடுவேன்? [யாதொன்றும் பாட மாட்டேன்.]

* * * [வேயின் மலிபுரை.] நப்பின்னைப் பிராட்டியின் ஸம்ச்லேஷ விரோதிகளைத் தொலைத்து அவளை அடிமை கொண்டது போல என் விரோதிகளையும் தொலைத்து என்னை அடிமை கொள்பவனான எம்பெருமானை யொழிய வேறு சில நீசரைக் கவிபாட நான் நினைத்தாலும் என்வாய் அதுக்குப் பாங்காகாது என்கிறார். எம்பெருமானை வருணிக்கப்புகுந்து 'நப்பின்னைகேள்வன்' என்று சொல்லி அந்த நப்பின்னையைப் பல பாசுரங்களால் வருணிப்பது, அவளது தோளழகைப் பல பாசுரங்களால் வருணிப்பது இங்ஙனே எத்தனை யூழிகாலம் பாசுரம்பாட நினைத்தாலும் விஷயங்கள் விசாலமாயிருக்க, இதர விஷயங்களைப் பாட என்ன ப்ரஸக்தி? என்று காட்டுகிறார் முதலடியினால்.

கும்பனென்னும் இடையர் தலைவனது மகளும், நீளாதேவியின் அம்சமாகப் பிறந்ததனால் நீளா என்ற பெயரால் வழங்கப்பட்டு வருபவளுமான நப்பின்னைப் பிராட்டியைக் கண்ணபிரான் திருவாய்ப்பாடியில் மணம் புணர்ந்தனனாதலால் "பின்னை மணாளன்" என்று கண்ணபிரானுக்கு ப்ரஸித்தி.

"ஆய பெரும்புகழெல்லையிலாதன பாடிப்போய்க் காயங்கழித்து" என்ற சொல்தொடர் மிக இனிமையானது: எல்லையில்லாத பகவத் குணங்களையே இடைவிடாது பாடிக்கொண்டிருந்து அதுவே யாத்திரையாய் உடலை விடவேணுமென்கிற பாரிப்பை ஆழ்வார் தெரிவிக்கின்றனர். இந்த ரீதியிலே சரீரம் கழிந்தால் சுவர்க்கமோ நரகமோ செல்ல ப்ராப்தியில்லையே; அவனது திருவடி நிழலில்தானே யொதுங்கும் பாக்கியமுண்டாகும்: அதனை மூன்றுமடியி

OFFICE OF ... JUN 1938 ... MA...

ணற் பேசினர். இங்கே ஈட்டுஸ்ரீஸூக்தி காண்மின் ;—"சரீரத்தைக் கழித்த வனந்தரம் ஸ்வாநுபவம் பண்ணியிருத்தல் ப்ரயோஜநாந்தரங்களைக் கொள்ளுதல் செய்யவிராதே அடிமைக்குப் பாங்கான சரீரத்தைப் பெற்று, தாய்முலைக் கீழே யொதுங்கும் ஸ்தநந்தய ப்ரஜைபோலே திருவடிகளின்கீழே யொதுங்குவே னென்னும் அபிநிவேசத்தையுடைய நான்."

மாயமனிசர்— ப்ரகிருதிக்கு வசப்பட்ட மனிதர்கள் என்றபடி : "உத்பத்தியோடே வ்யாப்தமான விநாசத்தை யுடையவர்களை ; அதாவது—பாடத் தொடங்கின கவி முடிவதற்கு முன்னே முடியும் மநுஷ்யரை." என்பது ஈடு.

என்வாய்கொண்டு என்சொல்லவல்லேன்= வேறு சிலர் வாக்காலே பாடினால் பாடலாம் ; கழுத்துக்கு மேலே சொல்லுவோமென்றாலும் வாய் இசைகின்றதில்லை ; எம்பெருமான் விஷயத்திலே காதலைப்பண்ணி, புறம்பே சிலரைக் கவிபாட வொண்ணுமோ ? ... ... (௮)

வாய்கொண்டுமானிடம்பாடவந்த கவியேனல்லேன் *
ஆய்கொண்டசீர்வள்ளல் ஆழிப்பிரானெனக்கேயுளன் *
சாய்கொண்டவிம்மையும்சாதித்து வானவர்நாட்டையும் *
நீகண்டுகொள்ளென்று வீடும்தரும்நின்றுநின்றே. (௯)

வாய் கொண்டு	(அருமையான) வாக்கைக் கொண்டு	எனக்கே உளன்	என் வாக்குக்கே இலக்காக வுள்ளான் ; (அப்பெருமான்)
மானிடம்	அற்ப மனிதர்களை	சாய் கொண்ட	அழகிய
பாட வந்த	பாடப் பிறந்த	இம்மையும்	இஹ லோகத்து அர்ச்சாவதார அநுபவத்தையும்
கவியேன் அல்லேன்	கவி நானல்லேன் ;	சாதித்து	உண்டாக்கித் தந்து
ஆய்	(வேதாந்தங்களினால்) ஆராயப்பட்ட	வானவர் நாட்டையும் நீ கண்டு கொள் என்று	பரமபதாநுபவத்தையும் நீ பெறுவாயாக என்று சொல்லி
சீர் கொண்ட	திருக்குணங்களையுடைய	வீடும்	மோக்ஷ சுகத்தையும்
வள்ளல்	உதாரனாகிய	நின்று நின்று	அடைவு பட
ஆழி பிரான்	சக்கரக்கையனான பெருமான்	தரும்	கொடுத்தருள்வன்.

* * * [வாய்கொண்டு.] பரமோதாரனான எம்பெருமானாலே தன்னைக் கவிபாடுகையே ஸ்வபாவமாகப் பண்ணப்பெற்றவெனக்கு இதரஸ்துதிகளில் அதிகாரமில்லை யென்கிறார். "ஜிஹ்வே கீர்த்தய கேசவம் முரரிபும்—ஜிஹ்வே! கீர்த்தய கேசவம் முரரிபும்." என்றும் "நா வாயிலுண்டே நமோ நாரணவென்று ஓவாதுரைக்கு முரையுண்டே" என்றும் சொல்லுகிறபடியே அவன்தன்னைத் துதிக்கைக்காகவே படைக்கப்பட்ட வாயைக் கொண்டு நீசரைக் கவிபாடப் பிறந்தவனல்லேன் நானென்கிறார் முதலடியில்.

159926

ஆழ்வீர்! அனேக மஹர்ஷிகளும் மற்றும் முதலாழ்வார்கள் போல்வாரும் துதித்த எம்பெருமானையே நீரும் துதித்தால் என்னரஸமுண்டு? வெவ்வேறு விஷயமாகவன்றோ கவிபாடவேணும் என்று சிலர் சொல்ல, ஆய்கொண்டசீர்வள்ளலாழிப்பிரா னெனக்கேயுளன் என்கிறார். எம்பெருமானை நான் பேசுவது மற்றையோர் பேசினது போலவோ? "பெருங்கேழலார் தம் பெருங்கண் மலர்ப்புண்டரீகம் நம்மேலொருங்கே பிறழவைத்தார் இவ்வகாலம், ஒருவர் நம் போல்வருங் கேழ்பவருளரோ" (திருவிருத்தம்) என்னும்படி தன் கடாக்ஷத்தை என்பக்கலிலேயே ஒருமடை செய்ததுபோலத் தன்னைப்பற்றிக் கவிபாடுவதையும் என்னொருவனுக்கே உரியதாக்கி யருளின னெம்பெருமான் என்றவாறு. எனக்கே என்ற ஏகாரத்தில்—இப்படி எம்பெருமான் விஷயீகரித்தது என்னைத் தவிர வேறொருவரையுமில்லை யென்பது தெரிவிக்கப்பட்டதாம். "வலக்கையாழி யிடக்கைச் சங்கமிவையுடைய மால்வண்ணனை, மலக்கு நாவுடையேற்கு மாறுளதோவிம்மண்ணின் மிசையே" என்பர் மேலும்.

உபயவிபூதிநாதனான எம்பெருமானுடைய உபயவிபூதியும் அடியார்களின் ஆளுகைக்கென்றே ஏற்பட்டனவாதலால், பொறுக்கப் பொறுக்க உபயவிபூதி நலங்களையும் எம்பெருமான் தமக்குத் தந்தருளுகிறபடியைப் பின்னடிகளால் அருளிச்செய்கிறார். [சாய்கொண்ட விம்மையும்சாதித்து] ச்சாயா என்னும் வடசொல் சாய் என்று குறைந்துகிடக்கிறது. [சாய் கொண்ட]—ஒளிமிக்க என்றபடி. * இருள்தருமாஞாலத்திற் பிறவியை இகழ்ந்து கூறுகின்ற ஆழ்வார் தமது திருவாக்கினால் "சாய்கொண்ட விம்மையும் சாதித்து" என்றருளிச் செய்யலாமோ? ஐஹிக ஸுகம் இவர்க்கு ஏதுக்கு? என்று சிலர் சங்கிக்கக்கூடும். கேண்மின் ; — * கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலுமைங் கருவிகண்ட வின்பமாகிய சப்தாதி விஷய ஸுகமன்று இங்குக் கூறப்படுவது ; "இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன்" என்னும்படி இவ்வுலகத்திலேயே இடையூறின்றி பகவத் குணாநுபவம் பண்ணப்பெறில் அந்தஸுகம் பரமோத்தேச்யமாதலால் அதனையே இங்கு "சாய்கொண்டவிம்மை" என்பதனால் குறிக்கின்றார். திருவிருத்தத்தில் "வேதனை வெண்புரிநூலனை" (79) என்ற பாசுரத்தில் "சீதனையே தொழுவார் விண்ணுளாரிலுஞ் சீரியரே" என்றருளிச் செய்தமைகாண்க. எம்பெருமானை இந்நிலத்திலிருந்துகொண்டே இடைவிடாது வணங்கி யநுபவிப்பவர் யாரோ, அவர்கள், பரமபதத்தில் வாழும் நித்யமுக்தர்களிற்காட்டிலும் சிறந்தவர் என்றனர். இடைவிடாது எம்பெருமானை அநுபவிப்பதற்கென்றே வாய்த்த இடமான பரமபதத்தில் பகவதநுபவத்திற்கு எவ்வகையான இடையூறுமில்லையாதலால் அங்கிருந்துகொண்டு அவனையநுபவித்தல் வியப்பன்று ; உண்டியே உடையே உகந்தோடுமிம்மண்டலம் பகவதநுபவத்திற்கு நேர்விரோதியாதலால் அப்படிப்பட்ட இந்த இருள்தருமாஞாலத்திலிருந்து கொண்டே அங்ஙனம் நித்யாநுபவம் செய்யும்படியான ஒரு நன்மை வாய்க்குமாகில் அது பரமபதாநுபவத்திற் காட்டிலும் மிகச்சிறந்ததென்றே கொள்ளத் தட்டில்லையென்க. பெரிய திருவந்தாதியிலும் "ஒன்றுண்டு செங்கண்மால்" (53) என்னும் பாசுரத்தில் "நின்புகழில்வைகும்

தம் சிந்தையிலும் மற்றினிதோ, நீயவர்க்கு வைகுந்தமென்றருளும் வான்'' என்றருளியது நோக்கத்தக்கது. இப்போது லித்தமான குணாநுபவத்திற்காட்டிலும் இனிமேல் லித்திக்கக் கடவதான வைகுந்தத்திலனுபவம் சிறந்ததல்ல கிடாய் என்றாராயிற்று. ஆகவே "சாய்கொண்ட விம்மையும் சாதித்து" என்றது நன்கு பொருந்தும். இவ்விடத்திலே ஈட்டு ஸ்ரீஸூக்திகாண்மின் ;—"மோக்ஷ ஸாகத்திலும் நன்றாம்படி ஐஹிகத்திலே ஸ்வாநுபவமே யாத்ரையாம்படி பண்ணித்தருகை."

இப்படி இந்நிலத்தில் ஸ்வாநுபவத்தைக் குறையறத்தந்தருளி, நாளடைவிலே நித்யவிபூதியின் அநுபவத்தையும் தந்தருளும்படியை யருளிச்செய்கிறார் "வானவர் நாட்டையும்" என்று தொடங்கி. எம்பெருமான் பரமபதத்தை நித்யமுக்தர்களிட்ட வழக்காம்படி அவர்களுக்கு விதேயமாக்கி, அவ்விடத்தில் தான் பிறர்மனையில் குடியிருப்பவன்போல இருக்கின்றானென்று தோன்றுமாறு "வானவர்நாடு" என்கிறார். "வானிளவரசு வைகுந்தக்குட்டன்" என்றார் பெரியாழ்வாரும். "தேவாநாம் பூரயோத்யா" என்று சுருதியும் பரமபதத்தை நித்யமுக்தர்களினுடையதாகவே ஓதிற்று.

வானவர்நாட்டையும் நீகண்டுகொள்என்று= இராமபிரான் காட்டில் எழுந்தருளியிருந்த காலத்தில் ஊரிலே பரதாழ்வான் ஸ்ரீபண்டாரத்தை வளர்த்து வைத்து, மீண்டெழுந்தருளின இராமபிரானை நோக்கி "அவேக்ஷதாம் பவாந் கோஶம் கோஷ்டாகாரம் புரம் பலம் । பவதஸ்தேஜஸா ஸர்வம் க்ருதம் தஶகுணம் மயா ॥" (அவேக்ஷதாம் பவாந் கோஶம் கோஷ்டாகாரம் புரம் பலம், பவதஸ் தேஜஸா ஸர்வம் க்ருதம் தஶகுணம் மயா.) என்று காட்டிக் கொடுத்தாப்போலே ஸ்ரீவைகுண்டநாதனும் முக்தர்களாய் வருமவர்களை நோக்கி 'நீகண்டுகொள்' என்று காட்டுகிறான்போலும்.

நின்றுநின்றேவீடும்தரும்= ப்ராப்தகாலத்திலே மோக்ஷ ஸாம்ராஜ்யத்தையும் கொடுப்பன் என்று சிலர் பொருள் கூறினராம். நின்றுநின்று என்பதற்கு— 'ஸாத்மிக்க ஸாத்மிக்க' என்று பொருள் கொள்வது சிறக்குமென்று நம்பிள்ளை திருவுள்ளம். குளப்படியிலே கடலைமடுத்தாற்போலன்றிக்கே, எந்த நன்மை செய்தாலும் பொறுக்கப் பொறுக்கச் செய்தருள்வது எம்பெருமானியல்பு. "ஆற்றநல்ல வகைகாட்டுமம்மான்" என்பர் மேலும். "கலந்துபிரிந்து ஜ்ஞான பக்திகளை வளர்த்தது கனங்குழையிடக் காது பெருக்குதலும் மாஸோபவாஸி போஜனப் புறப்பூச்சும்போலே ஆற்றநல்ல மாபோகச் சிரமமாக" என்ற ஆசார்ய ஹ்ருதய திவ்யஸூக்தியும் காண்க. ... ... (கூ)

நின்றுநின்றுபலநாளுய்க்கும் இவ்வுடல்நீங்கிப்போய் *
சென்றுசென்றாகிலும்கண்டு சன்மம்கழிப்பானெண்ணி *
ஒன்றியொன்றியுலகம்படைத்தான் கவியாயினேற்கு *
என்றுமென்றுமினி மற்றொருவர்கவியேற்குமே ? (கo)

பல நாள்	அநேக காலம்	எண்ணி	திருவுள்ளம் பற்றி
நின்று நின்று	இருந்து	ஒன்றி ஒன்றி	(ஒருகாலும் சோம்பிக் கைவிடாமல்) மேன்மேலும் ஊக்கங் கொண்டு
உய்க்கும்	சேதனனைத் தன் வசத்திலே யாக்குகின்ற		
இ உடல்	இந்தச் சரீரத்தை	உலகம் படைத்தான்	உலகங்களைப் படைத்தருகின்ற எம்பெருமானுடைய
நீங்கி போய்	விட்டொழிந்து போய்		
சென்று சென்று ஆகிலும்	இப்படியே பல பல ஜனன மரணங்கள் நடந்த பின்பாகிலும் (ஏதேனுமொரு காலத்தில்)	கவிஆயினேற்கு	கவியாக அமைந்த எனக்கு
		இனி என்றும் என்றும்	இனி எந்நாளும்
கண்டு	தன்னைக் கண்டு	மற்று ஒருவர் கவி	வேறொருவரைக் கவி பாடுதல்
சன்மம்	பிறவியை		
கழிப்பான்	கழிக்கக்கூடுமென்று	ஏற்குமே	தகுமோ? (தகாது.)

* * * [நின்றுநின்று.] தன்னைத்துதிப்பதற்கென்றே கரணகளேபரங்களைக் கொடுத்தருளினவனான எம்பெருமான் திறத்திலே கவிபாடப்பெற்ற வெனக்கு மற்றொருவரைக் கவிபாடுதல் ஏலாது என்கிறார். உலகில் க்ருஷி செய்பவன் தான் செய்த க்ருஷி பழுதுபட்டொழிந்தாலும் 'இன்னமும் ஒரு தடவை செய்து பார்ப்போம்' என்றுகொண்டு மீண்டுமீண்டும் நசையாலே க்ருஷிதன்னையே செய்து பார்ப்பன் ; அதுபோல, எம்பெருமானும் "பத்தி யுழவன்" என்று திருமழிசைப்பிரான் அருளிச் செய்தபடியே பக்திக்ருஷி செய்பவனாதலால் அந்தக்ருஷி எத்தனை தடவை முட்டுப்பட்டாலும் 'இன்னொரு தடவையிலாகிலும் பலிக்கமாட்டாதோ' என்று கொண்டு மீண்டுமீண்டும் பிரபஞ்ச ஸ்ருஷ்டியைச் செய்தருள்வனென்கிறது இரண்டாமடிகளால்

நின்றுநின்று பலநாளுய்க்குமிவ்வுடல்= இதனால் நம்முடைய சரீரத்தின் கொடுமையைக் காட்டினபடி. காலமுள்ளதனையும் ஆத்மாவைத் தன் வசத்திலேயே இழுத்துக்கொண்டுசென்று அனர்த்தங்களுக்கு ஆளாக்குமதான சரீரம் என்றவாறு. இவ்வுடல் என்றது இந்த ஜன்மத்திலுள்ள ஒரு சரீரத்தை மாத்திரம் சொன்னபடியன்று ; ஜன்ம பரம்பரைதோறும் தொடர்ந்துவருகிற வுடல் என்றபடி.] இவ்வுடல் நீங்கிப்போய்ச் சென்று சென்றாகிலுங் கண்டு] ஆத்மாவானவன் சரீரத்தில் நின்றும் கிளம்பினவாறே போகக்கூடிய வழிகள் நான்கு உண்டு ; கர்ப்பகதி, யாம்யகதி, தூமகதி, அர்ச்சிராதிகதி (1. கர்ப்பகதி, 2. யாம்யகதி, 3. தூமகதி, 4. அர்ச்சிராதிகதி) என்பனவாம். அர்ச்சிராதிகதியாகச் சென்று பரமபதத்தை யடைந்து தன்னை யநுபவிக்கப் பெறவேணுமென்று எம்பெருமான் பாரித்திருந்தும் இவர்கள் அந்தக் கதியிற் செல்லாமல் மற்ற மூன்று கதிகளிலேயே செல்லுகிறார்கள். அது கண்டு எம்பெருமான் 'நம்முடைய மனோரதம் கைபெறப் பெறவில்லையே, இனி, பிரபஞ்ச ஸ்ருஷ்டியை நிறுத்திப் பொகட்டுவிடலாமா' என்று நினைத்தருளாமல் "இங்ஙனமே நடந்து போரும் அநேக ஜன்ம பரம்பரைகளினுள்ளே ஏதேனுமொரு ஜன்மத்திலாகிலும் இவர்கள் அர்ச்சிராதிகதிக்கு வாராமற் போவார்களா? என்றேனுமொருநாள் வரக்கூடும்" என்

றெண்ணி மேன்மேலும் உலகம் படைக்கின்றானும். "சோம்பாது இப்பல்லுருவை யெல்லாம் படர்வித்த வித்தா" என்றார் பெரிய திருவந்தாதியிலும்.

உலகம் படைத்தான் கவியாயினேற்கு = இங்ஙனே மேன் மேலும் கைவாங்காமல் ஒரு நசையாலே உலகத்தைப் படைத்துக்கொண்டே வந்த எம்பெருமானுடைய க்ருஷி என்னொருத்தனளவிலே பலித்ததனால் அவனையே கவிபாடும்படியான பாக்கியம் பெற்றேனென்றவாறு. "அவன் எதிர் சூழல்புக்குத் திரிந்து பண்ணின க்ருஷிபலித்து அவனுக்குக் கவியாகப் பெற்ற வெனக்கு" என்பது ஈடு.

என்று மென்றுமினி மற்றொருவர் கவி யேற்குமே? = எம்பெருமானது கவியாக வாய்க்கப்பெற்ற நான் இனி மற்றொரு நீசனையும் கவிபாடி நின்றேனாகில் எம்பெருமானுக்கு பலித்தக்ருஷிவீணாகுமன்றோ; ஆதலால் அத்தகைய செய்கையில் பிரவர்த்தித்தல் எனக்கு ஸ்வரூபவிருத்த மென்று தலைக்கட்டினாராயிற்று.

"உலகம்படைத்தான் கவியாயினேற்கு" என்றவிடத்திற்கு ஆசார்யஹ்ருதயத்தில் ஒரு விசேஷார்த்தம் அருளிச் செய்யப்பட்டுள்ளது குறிக்கொள்ளத் தக்கது. அதாவது—"படைத்தான் கவியென்றபோதே இதுவும் யதாபூர்வ கல்பனமாமே" என்பது முதல்பிரகரணத்தில் நாற்பத்தெட்டாவது சூர்ணிகை: 'பிரளயங் கொண்டவுலகத்தை முன்பு போல ஸ்ருஷ்டித்த ஈச்வரனுடைய கவி நான்' என்னும் பொருள் தோன்ற 'ஒன்றி யொன்றியுலகம் படைத்தான் கவியாயினேற்கு' என்று ஆழ்வார்தாம் அருளிச்செய்த பாசுரத்தை நோக்குமிடத்து, ஸ்ருஷ்டிதோறும் சந்திரன் ஸூர்யன் முதலிய ஸகல பதார்த்தங்களும் யதாபூர்வ கல்பனமாய் வருமாபோலே இந்த த்ராவிட வேதமும் ஸ்ருஷ்டிதோறும் யதாபூர்வகல்பனமாய் வருமென்று தோற்றுமிறே என்பது இந்த சூர்ணிகையின் கருத்து. ... ... (௧௦)

ஏற்கும்பெரும்புகழ் வானவரீசன்கண்ணன்தனக்கு *
ஏற்கும்பெரும்புகழ் வண்குருகூர்ச்சடகோபன்சொல் *
ஏற்கும்பெரும்புகழ் ஆயிரத்துளிவையுமோர்பத்து *
ஏற்கும்பெரும்புகழ் சொல்லவல்லார்க்கில்லைசன்மமே. (௧௧)

ஏற்கும் பெரு புகழ் } தனக்கு ஏற்றிருக்கின்ற மிக்க புகழையுடையனாய்
வானவர் ஈசன் நித்ய ஸூரி நாதனான
கண்ணன் தனக்கு } கண்ணபிரான் விஷயமாக,
ஏற்கும் பெரும்புகழ்
வண் குருகூர் சடகோபன் —;
சொல் அருளிச்செய்த
ஏற்கும் பெரும் புகழ் } ஏற்ற பெரும்புகழை யுடைய
ஆயிரத்துள் இவ்வாயிரத்தினுள்
ஏற்கும் பெரும் புகழ் } தகுதியான சிறந்த புகழை யுடைத்தான
இவை ஓர் பத்தும் } இந்தத் திருவாய்மொழியை
சொல்ல வல்லார்க்கு } ஓத வல்லவர்களுக்கு
சன்மம் இல்லை மறுபிறப்பு இல்லை.

* * * [ஏற்கும் பெரும்புகழ்.] இத்திருவாய்மொழி கற்றார்க்கு, பிறரைக்கவிபாடுதற்குரிய நீசப்பிறவி நேராதென்று பயனுரைத்துத் தலைக்கட்டுகிறார். இப்பாசுரத்தில் நான்கு அடிகளிலும் ஏற்கும்பெரும்புகழ் என்ற விசேஷணம் அமைந்திருக்கு மழகு நோக்கத்தக்கது. எம்பெருமானை உபயவிபூதிநாதன் என்று சொன்னால் ஏற்றிருக்குமாபோலே ஆழ்வாரை 'எம்பெருமான் கவி இவர்' என்றால் அப்படியே ஏற்றிருக்கும். 'அவ்வெம்பெருமானை உள்ளபடியே புகழும் வேதம் திருவாய்மொழிதான்' என்றால் இதுவும் ஏற்றிருக்கும். 'ஸ்வரூபநாசமாகப்பிறரைக்கவிபாடாமல் ஸ்வரூபம் நிறம்பெற எம்பெருமானையே கவிபாடுமாறு நிமித்த இப்பதிகமே இவ்வாயிரத்தினுள்ளும் சிறந்தது' என்றால் இதுவும் ஏற்றிருக்குமாயிற்று. ... ... (௧௧)

ஒன்பதாந் திருவாய்மொழி உரை முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி.

ரம்யஸ்தாநாதியோகாத் அமிதவிபவத: ஸத்பதப்ராபகத்வாத்
ஸம்யக்ஸாயுஜ்யதாநாத் அநகவிதரணாத் ஸர்வதேஹித்வயோகாத் ।
ஸ்வஸ்யாத்யந்தஸம்பந்திபிரநுவிதயா ஸர்வதா போக்யபாவாத்
வைதர்க்யாத் வாக்குணாநாம் ஸ்துதி விஷயமஸௌ ந்யாயமாஹ நிஷித்தாந் ॥

1. ரம்யஸ்தாநாதியோகாத் * தென்னாதென வென்று வண்டு முரல் திருவேங்கடத்து * ரமணீயமான திருமலை முதலானவற்றில் எழுந்தருளியிருக்குமிருப்பைச் சொன்னபடி.

2. அமிதவிபவத: * குளனார் கழனிசூழ் கண்ணன் குறுங்குடி * செல்வம் மிகுந்திருக்குமிருப்பைச் சொன்னபடி.

3. ஸத்பதப்ராபகத்வாத். * போம் வழியைத்தரும் நங்கள் வானவரீசன் * அர்ச்சிராதி மார்க்கத்தை யடைவிக்கும் படியைச் சொன்னபடி.

4. ஸம்யக்ஸாயுஜ்யதாநாத். * தன்னாகவே கொண்டு சன்மஞ் செய்யாமையுங் கொள்ளுமே. * தன்னோடு பரமஸாம்யத்தைத் தந்தருளுமாற்றைச் சொன்னபடி.

5. அநகவிதரணாத். * வேண்டிற்றெல்லாந் தருங்கோதிலென்வள்ளல் * வேண்டினார்க்கு வேண்டினபடியே கொடுத்து ஒன்றுங்கொடுத்ததாக எண்ணாத ஔதார்யத்தைச் சொன்னபடி.

6. ஸர்வஶேஷித்வசிஹ்நாத். * செம்மின் சுடர்முடியென் திருமாலுக்கு * ஸர்வஸ்வாமித்வஸூசகமான திருவபிஷேகத்தையும் லக்ஷ்மீபதித்வத்தையுமுடைமை சொன்னபடி.

7. ப்ரக்க்யாத ஆக்க்யாஸஹஸ்ரை:. * ஓராயிரம் பேருமுடையபிரானை.* துதிப்பதற்கு உரிய ஆயிரந்திருநாமங்களுடைமை சொன்னபடி.

8. அவதரணரஸை:. * பின்னைக்கு மணாளனை.* விபவாவதாரத்தில் செய்த விஹாரத்தைச் சொன்னபடி.

9. புக்திமுக்த்யாபிமுக்க்யாத். * சாய்கொண்டவிம்மையும் சாதித்து வானவர் நாட்டையும் நீ கண்டு கொள்ளென்று வீடுந்தரும்.* இங்கிருந்து செய்யும் குணாநுபவத்தையும் அங்குப்போய் அநுபவிக்கும் முக்திஸாம்ராஜ்யத்தையும் காலக்ரமேண கொடுத்தருளுமாற்றைச் சொன்னபடி.

10. த்ரைலோக்யோத்பாதநாச்ச. *ஒன்றியொன்றியுலகம்படைத்தான்* சேதநர்கள் ஒருஜன்மமல்லா வொருஜன்மத்திலாகிலும் ஈடேறவேணுமென்றெண்ணி ஒருநாளும் பின்வாங்காமல் உலகங்களைப்படைக்கும்படியைச் சொன்னபடி.—ஆக இப்படிப்பட்ட காரணங்களாலே [அஜம்] பிறப்பிலியான எம்பெருமானை [ஸ்துதிவிஷயம்] துதிப்பதற்கு யோக்கியனாக [வ்யாஹரத்] (ஆழ்வார்) அருளிச்செய்தார். [நிந்திதஅந்ய:] இங்ஙனம் எம்பெருமானைத் துதிக்கவில்லாத பிறரை நிந்திப்பதுஞ் செய்தாரென்றபடி. "ஸ்துதிவிஷயதநும்" என்றும் பாடமுண்டு.

தூப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:.

திருவாய்மொழி நூற்றந்தாதி.

சொன்னவில் வாழ்புலவீர் சோறு கூறைக்காக
மன்னாத மானிடரை வாழ்த்துதலால் — என்னாகும்
என்னுடனே மாதவனை யேத்துமெனுங்குருகூர்
மன்னருளால் மாறுஞ்சன்மம். (உக)

நாவில்	நாக்கிலே	என் ஆகும்	என்ன பயனுண்டாகும்? (ஒன்றுமில்லையாம்:)
சொல்	இனிய கவி மொழிகள்	என்னுடனே	என்னுடன் கூடி
வாழ்	விளங்கப் பெற்ற	மாதவனை	திருமாலை
புலவீர்	பண்டிதர்களே!	ஏத்தும்	ஏத்துங்கள்"
சோறு கூறைக்கு ஆக	சோற்றுக்கும் துணிக்குமாக	எனும்	என்று உபதேசித்த
மன்னாத மானிடரை	நிலை நின்று ஜீவித்திருக்க மாட்டாத மனிசர்களை	குருகூர் மன்	திருநகரிக்குத் தலைவரான ஆழ்வாருடைய
வாழ்த்துதலால்	கவிபாடிப் புகழ்வதனால்	அருளால்	கிருபையினாலே
		சன்மம் மாறும்	பிறவித்துயர் தொலையும்.

வாக்கிலே கவனசாதுரியமுடையவர்களாய், அந்தக் கவித்திறமையை பகவத்விஷயத்திலே செலுத்தாமல் அல்பாயுஸ்ஸுக்களான நீச மானிசர்களிடத்திலே செலுத்தி * காசுங்கறையுடைக்கூறைக்குமங்கோர் கற்றைக்குமாசையினால் அவர்களைத் துதித்துக்கொண்டுதிரியும் புலவர்களை விளித்து, அந்தோ! நீங்கள் இங்ஙனம் பயனற்றசெயலைச் செய்துதிரிவதுதவிர்ந்து என்னோடேகூட எம்பெருமானைத் துதித்து வாழ்ந்துபோங்கள் என்று ஆழ்வார் உபதேசித்தருளினபடியைக்கூறி, அப்படிப்பட்ட ஆழ்வாருடைய திருவருளுக்கு நாம் இலக்காகப்பெற்றோமாகில் நம்முடைய பிறவித்துயர் நீங்குமென்று அருளிச்செய்தாராயிற்று. .... (உக)

ஜீயர் திருவடிகளே சரணம்.

த்ராமிடோபநிஷத் ஸங்கதி.

அந்யஸ்துதேந விஷயாநபி மந்த்ரஸித்தாந்
ஸ்ரோத்ருந் விஸ்ருஜ்ய நிஜவ்யஸநேந யாநு:।
தஸ்யாப்யுபாய உபஜாத விபோதஸௌநே:
அந்யஸ்துதேஷகாரணம் நவமே ஸ்வபாவ:॥

(கருத்து) பிறர்களைத்துதித்துக் கவிபாடி அதனால் பேறுபெறவிரும்பிய சில புலவர்களைப்பார்த்து அவர்கள் படும் அநர்த்தத்தை விமர்சித்தவாறே ஆழ்வார் தம்முடைய பகவத்விரஹவ்யஸநம் ஒருவாறு தணியப்பெற்றவராய், பரமகிருபையினாலே அவர்களை நோக்கிஉபதேசம் செய்யப்புகுந்து நரஸ்துதியில் நின்றும் அவர்களை மீட்கப்பார்த்தும் அவர்கள் மீளக்காணாமையாலே, அவர்களைத் திருத்தப்பாடுபடுவதில் நின்றும்கையொழிந்து, அவர்களைப்போலே தாம் நரஸ்துதியில் ஒருப்பட்டு அநர்த்தப்படாமைக்கு உகந்துபேசித் தலைக்கட்டினாரென்றதாயிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

மூன்றும்பத்து—பத்தாந் திருவாய்மொழி, சன்மம்பலபலசெய்து.

அவதாரிகை :—கீழ்த் திருவாய்மொழியில்—துதிப்பதற்கு வாய்த்த ஸ்வரூப ரூப குணவிபூதி சேஷ்டிதங்களையுடையனான எம்பெருமானைத் துதிப்பது தவிர்ந்து க்ஷுத்ரநரஸ்துதிகளிலே வாய்மெலுத்தித் திரியுமவர்களை உபதேசமாத்தாலே திருத்தப்பார்த்தும் அவர்கள் திருந்தக்காணாமையாலே, இவர்களைப் போலே நாமும் நரஸ்துதியிலே விழுந்து அநர்த்தப்படாதிருக்கப் பெற்றோமே! என்று தம் உகப்போடே தலைக்கட்டினார். அந்த உகப்பை விசேஷித்துப் பெருகுகிறது இத்திருவாய்மொழியில். நரஸ்துதிகளில் செல்லப்பெறுதமாத்திரமேயன்றியே எம்பெருமான் விஷயத்திலே பரிபூர்ணமாக அவகாஹித்துத் தாம் அநுபவிக்கப்பெற்ற பரிசைப் பாரக்கப்பேசி, குறைமுட்டு பரிவு இடர் துயர் துன்பம் அல்லல் துக்கம் தளர்வு கேடொன்றும் தமக்கில்லாமையை உள்குழைந்து பேசுகிறார். ... ... (*)

சன்மம்பலபலசெய்துவெளிப்பட்டுச் சங்கோடுசக்கரம்வில் *
ஒண்மையுடையவுலக்கை ஒள்வாள்தண்டுகொண்டுபுள்ளூர்ந்து * உலகில்
வன்மையுடையவரக்கர் அசுரரைமாளப்படைபொருத *
நன்மையுடையவன்சீர்பரவப்பெற்ற நானோர்குறைவிலனே. (க)

பல பல	பல பல வகைப்பட்ட	உலகில்	உலகத்திலுள்ள
சன்மம்	அவதாரங்களை	வன்மை உடைய	கடினமான மனமுடைய
செய்து	பண்ணி	அரக்கர்	அரக்கர்களும்
வெளிப்பட்டு	ஸம்ஸாரிகளின் கண்ணுக்கும் புலப்பட்டு	அசுரர்	அசுரர்களும்
சங்கொடு சக்கரம்	சங்கு சக்கரங்களையும்	மாள	மாண்டொழியும்படி
வில்	சார்ங்கத்தையும்	படை பொருத	ஆயுதப்பிரயோகம் பண்ணிப் போர்செய்து தொலைத்த
ஒண்மை உடைய	ஒளி பொருந்திய	நன்மை உடையவன்	நன்மைமிக்கவனான எம்பெருமானுடைய
உலக்கை	முஸலத்தையும்	சீர்	திருக்குணங்களை
ஒள் வாள்	அழகிய நந்தக வாளையும்	பரவ பெற்ற நான்	துதிக்கப்பெற்ற அடியேன்
தண்டு	கௌமோதகி யென்னும் கதையையும்	ஓர் குறைவு இலன்	ஒரு குறையுமுடையேனல்லேன்.
கொண்டு	ஏந்திக்கொண்டு		
புள் ஊர்ந்து	பக்ஷிராஜனை வாஹனமாகக் கொண்டு		

* * * [சன்மம் பலபல] திவ்யாயுதங்களோடே எம்பெருமான்வந்து அவதரிக்கும்படியை அநுஸந்திக்கப்பெற்றவெனக்கு ஒருகுறையுமில்லையென்கிறார். சன்மம் பல பல செய்து—'பிறப்பிலி' என்று பேர்பெற்றிருக்கிற தான் கர்மவச்யனாயன்றியே க்ருபாவச்யனாய்ப் பல பல யோனிகளிலும் பிறக்கிறபடியை அநுஸந்திக்கின்றவெனக்கு ஒரு குறையுமில்லையென்கிறார். கர்மவச்யர்களான நம்முடைய பிறவிகட்கு எல்லைகாணமுடியும்; அவனுடைய அவதாரங்கட்கு எல்லை காணப்போகாது; ஏனெனில், கருமத்திற்கு அவதியுண்டு; அநுக்ரஹத்திற்கு அது கிடையாதே: ஆகலால் "சன்மம் பலபல" என்றார்.

"நவக்ஷுஷா வஶ்யதி கஶ்சநைநம்" என்றும் "நமாம்ஸசக்ஷுரபிவீக்ஷதே தம்" என்றும் "என்றேனும் கட்கண்ணால் காணாத அவ்வுரு" என்றுஞ் சொல்லுகிறபடியே புலப்படாத திருவுருவத்தைப் புலப்படுத்துகிறபடியை அநுஸந்திக்கின்றவெனக்கு ஒரு குறையில்லை யென்கிறார் வெளிப்பட்டு என்பதனால்.

[சங்கோடு சக்கரமித்யாதி.] ஒரு கற்பகத்தருபணைத்துக் கணுத்தோறும் அரும்பினாற்போலே யுள்ள திவ்யாயுதச் சேர்த்தியழகை யநுஸந்திக்கின்றவெனக்கு ஒரு குறையுமில்லையென்கிறார். ஒரு தேசவிசேஷத்திலே நித்யஸூரிகளே அநுபவிக்கக் கடவதான இவ்வழகை இங்குள்ளாரும் அநுபவிக்கும்படி தோளிலே சுமந்து ஆங்காங்குத் திரிபவன் பெரியதிருவடியாதலால் "காய்சினப் பறவையூர்ந்து பொன்மலையின் மீமிசைக் கார்முகில்போல்" என்று அநுபவிக்க அழகியதான அந்தச் சேர்த்தியைப் புள்ளூர்ந்து என்பதனால் அநுபவிக்கிறார்.

அழகுக்கு இலக்காய் வாழமாட்டாதே அம்புக்கு இலக்காய் முடிந்து போவதற்கென்று இட்டுப்பிறந்த அஸுரராக்ஷஸர்களை ஆயுதங்களாலே முடித்தருளும் வீரத்தை அநுஸந்திக்கிறவெனக்கு ஒரு குறையுமில்லையென்கிறார் பின்னடிகளால். வன்மையுடைய=எம்பெருமானது வடிவழகுகண்டும் நெஞ்சு நெகிழமாட்டாத கடுநெஞ்சினர் என்றபடி. மாளப்படைபொருத நன்மையுடையவன்=பிறரைக்கொல்வது தீமையாயினும் 'ஆச்ரிதவிரோதிகள்' என்னுங்காரணத்தினால் அரக்கர்களையும் அசுரர்களையுங்கொல்வது நன்மையேயென்று காட்டுகிறபடி. ஸங்கல்ப மாத்திரத்தினால் ப்ரபஞ்சஸ்ருஷ்டி முதலிய ஸகலகாரியங்களையும் நிர்வஹிக்கவல்லவனான தான் அந்த ஸங்கல்பத்தைக் கொண்டே அரக்கரசுரர்களையும் மாளச்செய்யலாமாயிருக்க, அங்ஙனம் செய்யாது அதற்காகத்தனியே ஒரு பயணமெடுத்துவிட்டு [அவதரித்து]ச் செய்ததை நன்மையாகக் கூறுகிறாராகவுமாம். "ஈச்வரன் அவதரித்துப் பண்ணின ஆனைத்தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பொறாமையென்று ஜீயரருளிச்செய்வர்" என்பது ஸ்ரீவசனபூஷணம். பாகவதர்கள் பக்கலிலே எம்பெருமான் வைத்திருக்கும் ஆசாபாசம் வியக்கத்தக்கதென்று தேறினபடி.

சீர்பரவப்பெற்ற நான் ஓர் குறைவிலன் = அஸுரப்ரக்ருதிகளாய்ப்பிறந்து முடிந்து போவாரும், மனிசர்களாயே பிறந்துவைத்து நரஸ்துதிமுதலியவற்றில்

இழிந்து ஸ்வரூபநாசம் பெற்றுப்போவாருமான இவ்வுலகில் நானொருவனே குறையற்றவன் என்று தம்முடைய நன்மைக்குத் தாம் உகந்து பேசினாராயிற்று. .... (க)

குறைவில்தடங்கடல்கோளரவேறித் தன்கோலச்செந்தாமரைக்கண் *
உறைபவன்போலவோர்யோகுபுணர்ந்த ஒளிமணிவண்ணன்கண்ணன் *
கறையணிமூக்குடைப்புள்ளைக்கடாவி அசுரரைக்காய்ந்தவம்மான் *
நிறைபுகழேத்தியும்பாடியுமாடியும் யானொருமுட்டிலனே. (உ)

குறைவு இல்	குறையற்ற [பரிபூர்ணமான]	கறை அணி மூக்கு உடை	கறையை அணிந்த மூக்குடையவனான
தட கடல்	விசாலமான திருப்பாற் கடலிலே	புள்ளை	பக்ஷி ராஜனை
கோள் அரவு ஏறி	மிடுக்களுன திருவனந் தாழ்வான் மீது ஏறி	கடாவி	நடத்தி
தன்	தன்னுடைய	அசுரரை காய்ந்த	அசுரர்களை முடித்தவனுமான
கோலம்	அழகிய	அம்மான்	எம்பெருமானுடைய
செம் தாமரை கண்	செந்தாமரை போன்ற திருக்கண்கள்	நிறை புகழ்	நிறைந்த புகழை
உறைபவன் போல	துயிலப் பெற்றவன் போல	யான்	நான்
ஓர் யோகு புணர்ந்த	யோக நித்திரை செய் தருள்கின்ற	ஏத்தியும்	துதித்தும்
ஒளி மணி வண்ணன்	அழகிய நீலமணி போன்ற நிறத்தனும்	பாடியும்	இசையில் அமைத்துப் பாடியும்
கண்ணன்	கண்ணனாய்த் திருவவ தரித்தவனும்	ஆடியும்	கூத்தாடியும்
		ஒரு முட்டு இலன்	(எம்பெருமானை யனுபவிப்பதில்) ஒரு தடையு முடையே னல்லேன்.

* * * [குறைவில்தடங்கடல்.] இந்நிலத்தில் வந்து திருவவதாரம் பண்ணுதற்கு அடியாகத் திருப்பாற்கடலில் கண்வளர்ந்தருளிப் பிறகு வஸுதேவர் திருமகனாய் வந்து பிறந்தருளி ஆச்ரிதவிரோதிகளைத் தொலைத்தருளின கண்ணபிரானுடைய கீர்த்தியைப் பலபடியும் அநுபவிக்கப்பெற்றநான் மேன்மேலும் இங்ஙனம் அனுபவிப்பதில் யாதொருதடையு முடையேனல்லேனென்கிறார்.

குறைவில் தடங்கடல்= கீழே தமக்குக்கூறிய குறைவில்லாமையை இங்குத் தடங்கடலுக்குங் கூறுகின்றார், தடங்கடலும் நானுமே குறைவில்லாதவர்கள் என்கிற கருத்துப் போலுமாழ்வார்க்கு. "மாலுங் கருங்கடலே! என்னோற்றாய், வையகமுண்டாலினிலைத் துயின்றவாழியான், கோலக் கருமேனிச் செங்கண்மால் கண்படையுள், என்றுந் திருமேனி நீ தீண்டப்பெற்று" என்ற பொய்கையார் பாசுரத்தின்படியே கடலின் குறைவில்லாமை காண்க. "தன் தாளுந் தோளும் முடிகளும் சமனிலாத பலபரப்பி—கிடந்தான்" என்கிறபடியே எம்பெருமான் தனது திவ்யாவயவங்களை ஸங்கோசமறப்பரப்பிக் கொண்டு கண்வளர்ந்தருளுகைக்குப் பர்யாப்தமான இடமுடையகடல் என்பார் **'தடங்கடல்'** என்கிறார். அப்படிப்பட்ட கடலிலே, மிடுக்குடைய திருவனந்

தாழ்வான்மீது திருக்கண்வளர்பவன்போல உலகங்களை ரக்ஷித்தருளும்படியைச் சிந்தைசெய்து கொண்டிருக்கின்றானாயிற்று.

"ஓர் யோகுபுணர்ந்த வொளிமணி வண்ணன் கண்ணன்" என்ற சொற்சேர்த்தியழகை நோக்கி ஈட்டில் நம்பிள்ளையருளிச்செய்த ஸ்ரீஸூக்திகள் இன்சுவையே வடிவெடுத்தவை காண்மின்;—"ஸகலப்ராணிகளும் நம்மைக்கிட்டிக் கரைமரஞ் சேர்ந்ததாம் விரகு ஏதோவென்று இவற்றினுடைய ரக்ஷணோபாய சிந்தை பண்ணினால் அவ்வநுஸந்தானம் பொறுமையாலே நாக்கு உலரும்; அப்போது கற்பூரநிகரம் வாயிலேயிடுவாரைப்போலே * ஆத்மாநம் வாஸுதேவாக்யம் சிந்தயந்* என்று தன்னைத்தானே அநுஸந்தியாநிற்கும்: இப்படி அநுஸந்தித்தவாறே ரக்ஷணோபாயம் தோற்றுமே (ஒளிமணிவண்ணன் கண்ணன்) ரக்ஷ்யவர்க்கத்தைத் தன்வடிவழகாலே கரைமரஞ் சேர்க்கைக்காக க்ருஷ்ணனாய் வந்தவதரித்தவன்" என்பன ஈட்டுஸ்ரீஸூக்திகள். உலகத்தை ரக்ஷிக்கச் சிந்தனை செய்தவளவில், 'அழகிய வுருவத்துடனே உலகிற் சென்று அவதரித்து சேதனர்களை ஈடுபடுத்துவதே நலம்' என்று தேறி அப்படியே கண்ணனாக வந்து பிறந்தானென்றவாறு.

இந்நிலத்தில் அவதரித்து ஆச்ரிதவிரோதிகளைத் தொலைத்தபடி சொல்லுகிறது மூன்றமடி. பெரியதிருவடியின்மீது ஏறிச் சென்று பகைவரைப் பாற்றின வரலாறுகள் பலவுண்டு: "பொருந்தாவரக்கர் வெஞ்சமத்துப் பொன்றவன்று புள்ளூர்ந்து, பெருந்தோள் மாலிதலைபுரளப் பேர்ந்தவரக்கர் தென்னிலங்கை, இருந்தார்த்மையுடன் கொண்டு அங்கெழிலார் பிலத்துப் புக்கொளிப்பக், கருந்தாள் சிலைகைக்கொண்டான்" (பெரிய திருமொழி 8-6-2) என்பது முதலிய பாசுரங்கள் காண்க.

கருடன் தனது மூக்கினாலேயே பகைவரைக் குத்திக் கொன்று, அதனால் மூக்கிலே கறையேறிக்கிடக்கும்: அக்கறைகழுவ அவஸரமில்லாமல் அதுவே ஆபரணமாயிருக்குமாம மூக்குக்கு; ஆனதுபற்றியே "கறையணி மூககுடைப்புள்" என்றார். மற்றொருவகையாகவும் கூறுவதுண்டு; கருடன் முட்டையாயிருக்கும் பருவத்திலே புத்திரனுடைய முகத்தைக்காணவேணுமென்கிற விரைவினால் தாய் குத்திப்பார்க்கையில் அப்போது மூக்கிலேபட்டு ஓரடையாளம் பிறந்து அது எம்பெருமானுக்கு ஸ்ரீவத்ஸம் போலே மறுவாக ஆயிற்றென்றும், அது தோன்றவே 'கறையணி மூக்குடைப்புள்' என்றது என்றும் அருளிச் செய்வர்.

இப்படியாக எம்பெருமான் அடியாரை ரக்ஷித்துப்படைத்த பெரும் புகழ்களைத்துதித்தும் இசையிலே வைத்துப்பாடியும் ஆடியும் திரிகிற நான் இடைவிடாத பகவதநுபவத்தையுடையேன் என்றாராயிற்று. .... (உ)

முட்டில்பல்போகத்தொருதனிநாயகன் மூவுலகுக்குரிய *
கட்டியைத்தேனையமுதை நன்பாலைக்கனியைக்கரும்புதன்னை *
மட்டவிழ்தண்ணந்துழாய்முடியானைவணங்கி அவன் திறத்துப்
பட்டபின்னை * இறையாகிலும் யானென்மனத்துப்பரிவிலனே.

முட்டு இல்	இடையூறொன்று மில்லாத	கரும்பு தன்னை	கரும்பு போன்ற னுமாய்
பல் போகத்து	பலவகையான போகங் களை யுடையவனும்	மட்டு அவிழ்	மது பெருகப்பெற்ற
ஒரு தனி நாயகன்	ஒப்பற்ற தலைவனும்	தண் அம் துழாய் முடியானை	குளிர்ந்தழகிய திருத் துழாய மாலையைத் திரு முடியிலணிந்தவனுமான எம்பெருமானை
மூ உலகுக்கு உரிய	மூவுலகத்தவர்கட்கும் பொதுவிலே போக்ய மான	வணங்கி	நமஸ்கரித்து
கட்டியை	கருப்பங்கட்டி போன்றவனும்	அவன் திறத்து	அவன் விஷயத்திலே
தேனை	தேன் போன்றவனும்	பட்ட பின்னை	ஆட்பட்டேனாதலால்
அமுதை	அம்ருதம் போன்றவனும்	யான்	இப்படிப்பட்ட அடியேன்
நல் பாலை	நல்ல பால்போன்றவனும்	இறை ஆகிலும்	சிறிதளவும்
கனியை	கனி போன்றவனும்	என் மனத்து	என்மனத்தில்
		பரிவு இலன்	பீடையையுடையே னல்லேன்.

* * * [முட்டில் பல் போகத்து.] எம்பெருமானுடைய போக்யதையை அநுஸந்தித்து அவனுக்கு அடிமை செய்வதிலேயே ஊன்றியிருக்குமெனக்கு ஒரு துக்கமுமில்லை யென்கிறார்.

நாமும், நம்மில் மேற்பட்டவர்களான தேவர்களும், அவர்கட்கும் தலைவரான இந்திரன் பிரமனீசன் முதலாயினோரும் பலவகைப்பட்ட போகங்களை அநுபவிப்பது உண்டாயினும் ஒவ்வொருவருடைய போகமும் அளவுபட்டதாயும், ஒரு காலத்திலே அழியக் கூடியதாயுமிருக்குமத்தனையல்லது ஸ்திரமாய் அளவு கடந்ததாயிருக்கும் போகம் எம்பெருமானொருவனுக்கேயாகுமென்பது விளங்க "முட்டில் பல் போகத்து" என்றார். "யாங்கடவுளென்றிருக்கு மெவ்வுலகிற் கடவுளர்க்கும் ஆங்கடவுள் நீ யென்றால் அஃதுனக்கு வியப்பாமோ?" (திருவரங்கக்கலம்பகம்—க.) என்றபடி ஈச்வராபிமானிகளெல்லார்க்குள்ளும் தனி நாயகன் ஸ்ரீமந்நாராயணனேயாவன் என்பது தோன்ற "ஒரு தனிநாயகன்" என்றார். 'மூவுலகுக்குரிய' என்பது தனிநாயகனுக்கு அடைமொழியாகும். 'மூவுலகுக்குரிய கட்டியை' என்று மேலோடே அந்வயித்தலுமுண்டு. ஒவ்வொரு உலகத்தவர் ஒவ்வொன்றை போக்யவஸ்துவாகக் கொண்டவராயினும் ஸர்வஸாதாரண போக்யதை எம்பெருமானொருவனுக்கேயாகும். இரண்டாமடி முழுவதாலும் எம்பெருமானுடைய ஸ்வரூபத்திலுள்ள போக்யதை பேசப்பட்டது. மூன்றாமடியில் "மட்டவிழ்தண்ணந்துழாய் முடியானை" என்பதனால் திவ்யமங்கள விக்ரஹத்தின் போக்யதை அநுபவிக்கப்பட்டது. கட்டியை என்று தொடங்கி (கட்டி, தேன், அமுது, பால், கனி, கரும்பு என்று) ஆறு சுவைப்பொருள்களைக் கூறியது ஆழ்வார்தமக்கு எம்பெருமானே அறுசுவையடிசில் என்று காட்டினபடியாம்.

"ரஸம் ஹ்யேவாயம் லப்த்வா நந்தீ பவதி" என்று உபநிஷத்திற் கூறியபடியே ஒரு தேசவிசேஷத்திலே சென்று பெறவேண்டிய அநுபவம் எனக்கு

இந்நிலத்திலேயே கிடைத்து விட்டதனால் ஒரு குறையுமுடையேனல்லேன் என்றாராயிற்று. .... (ரு)

பரிவின்றிவாணனைக்காத்துமென்று அன்றுபடையோடும்வந்தெதிர்ந்த *
திரிபுரம்செற்றவனும்மகனும் பின்னுமங்கியும்போர்தோலைய *
பொருசிறைப்புள்ளைக்கடாவியமாயனை ஆயனைப்பொற்சக்கரத்து
அரியினை * அச்சுதனைப்பற்றி யானிறையேனுமிடரிலனே. (ச)

அன்று	முன்பொருகாலத்தில்,	பொரு சிறை புள்ளை கடாவிய	பொருகின்ற சிறகையுடைய பக்ஷிராஜனை நடத்திய
வாணனை	பாணாஸுரனை	மாயனை	ஆச்சர்ய சக்தியுக்தனும்
பரிவு இன்றி	வருத்தமின்றியே	ஆயனை	கோபாலக்ருஷ்ணனாய் அவதரித்தவனும்
காத்தும் என்று	'காக்கக்கடவோம்' என்று அபிமானித்து	பொன் சக்கரத்து	அழகிய திருவாழியையுடையவனாய்க் கொண்டு
படையொடும்	ஆயுதங்களோடுகூட	அரியினை	விரோதிகளை அழியச் செய்பவனும்
வந்து எதிர்ந்த	வந்து எதிரிட்ட	அச்சுதனை	அடியார்களைக் கைவிடாதவனுமான எம்பெருமானை
திரிபுரம் செற்றவனும்	த்ரிபுரதஹநம் செய்தவனான சிவபிரானும்	பற்றி	அடைந்து
மகனும்	அவன்மகனான ஆறுமுகனும்	யான்	அடியேன்
பின்னும்	அதற்குமேலே	இறையேனும்	சிறிதளவும்
அங்கியும்	அக்நியும்	இடர் இலன்	இடைஞ்சலுடையேனல்லேன்.
போர்	போர்க்களத்திலே		
தோலைய	பங்கமடையும்படி,		

* * * [பரிவின்றி.] தேவதாந்தரங்களைப் பற்றினவர்களுக்கு அவர்கள் ரக்ஷகரல்லர் என்பதையும், தன்னைப் பற்றினவர்களைத் தான் கைவிடுவதில்லையென்பதையும் நன்கு காட்டிக்கொடுத்த எம்பெருமானைப் பற்றினவெனக்கு ஒரு குறையுமில்லை யென்கிறார்.

பலிச்சக்ரவர்த்தியின் ஸந்ததியிற் பிறந்த பாணாஸுரனுடைய பெண்ணாகிய உஷையென்பவள், ஒருநாள் ஒரு புருஷனோடு தான் கூடியிருந்ததாகக் கனாக்கண்டு அவனிடத்தில் மிகுந்த காதல் கொண்டவளாய், தன் உயிர்த்தோழியான சித்திரலேகைக்கு அச்செய்தியைத் தெரிவித்து அவள் மூலமாய் அந்தப் புருஷன் க்ருஷ்ணனுடைய பௌத்திரனும் ப்ரத்யும்நனது புத்திரனுமாகிய அநிருத்தனென்று அறிந்துகொண்டு 'அவனைப் பெறுவதற்கு உபாயம் செய்ய வேண்டும்' என்று அத்தோழியையே வேண்ட, அவள் தன் யோகவித்யையின் மகிமையினால் துவாரகைக்குச் சென்று அநிருத்தனைத் தூக்கிக்கொண்டுவந்து அந்தப்புரத்திலே விட, உஷை அவனோடு போகங்களையநுபவித்துவர, இச்செய்தியைக் காவலாளராலறிந்த அநதப்பாணன் தன் சேனையுடன் அநிருத்தனை யெதிர்த்து மாயையினாலே பொருது நாகாஸ்திரத்தினால் கட்டிப்போட்டிருக்க, துவாரகையிலே அநிருத்தனைக்காணாமல் யாதவர்களெல்லாருங் கலங்கியிருந்த

போது, நாரதமுனிவனல், நடந்தவரலாறு சொல்லப்பெற்ற ஸ்ரீக்ருஷ்ணபகவான் பெரிய திருவடியை நினைத்தருளி உடனே வந்து நின்ற அக்கருடாழ்வானது தோள்மேலேறிக்கொண்டு பலராமன் முதலானோரோடுகூடப் பாணபுரமாகிய சோணிதபுரத்துக்கு எழுந்தருளும்போதே, அப்பட்டணத்தின் சமீபத்திற் காவல் காத்துக்கொண்டிருந்த சிவபிரானது ப்ரமதகணங்கள் எதிர்த்துவர, அவர்களையெல்லாம் அழித்து, பின்பு சிவபெருமானல் ஏவப்பட்டதொரு ஜ்வரதேவதை மூன்றுகால்களும் மூன்றுதலைகளுமுள்ளதாய் வந்து பாணனைக் காப்பாற்றும் பொருட்டுத் தன்னோடு போர்புரிய, தானும் ஒரு ஜ்வரத்தையுண்டாக்கி அதன் சக்தியினலே அதனைத் துரத்திவிட்ட பின்பு, சிவபிரானது அநுசரர்களும் வாணனது கோட்டையைச் சூழ்ந்துகொண்டு காத்திருந்தவர்களுமான அக்கிதேவர் ஐவரும் தன்னோடு எதிர்த்துவர, அவர்களையும் நாசஞ் செய்து பாணாஸுரனோடு போர் செய்யத்தொடங்க, அவனுக்குப் பக்கபலமாகச் சிவபெருமானும் ஸுப்ரம்மண்யன் முதலான பரிவாரங்களுடன் வந்து எதிர்த்துப் போரிட, கண்ணன் தான் ஜ்ரும்பணாஸ்திரத்தைப் பிரயோகித்துச் சிவபிரான் ஒன்றுஞ்செய்யமாட்டாமல் கொட்டாவிவிட்டுக்கொண்டு சோர்வடைந்துபோம்படி செய்து, ஸுப்ரஹ்மண்யனையும் கணபதியையும் உங்காரங்களால் ஒழுத்து ஓட்டி, பின்னர் அனேகமாயிரஞ் சூரியர்க்குச் சமானமான தனது சக்கராயுதத்தையெடுத்துப் பிரயோகித்து அப்பாணனது ஆயிரந்தோள்களையும் தாரைதாரையாய் உதிரமொழுக அறுத்து அவனுயிரையும் சிதைப்பதாகவிருக்கையில், பரமசிவன் அருகில் வந்து வணங்கிப் பலவாறு பிரார்த்தித்ததனல் அவ்வாணனை நான்கு கைகளோடும் உயிரோடும் விட்டருளி, பின்பு அவன் தன்னைத்தொழுது அநிருத்தனுக்கு உஷையைச் சிறப்பாக மணம் புரிவிக்க, அதன்பின் மீண்டுவந்தனன்—என்பது இப்பாசுரத்திற் குறித்த வரலாறு.

திரிபுரஞ் செற்றவனும் என்றதிலடங்கிய வரலாறு வருமாறு:—முற்காலத்தில் தாரகாசுரனுடைய புத்திரர்களாகிய வித்யுந்மாலி தாரகாக்ஷன் கமலாக்ஷன் என்னும் மூவரும் மிக்க தவஞ்செய்து பிரமனிடம் பெருவரம் பெற்று, வானத்துப்பறந்து செல்லுந் தன்மைவாய்ந்த மூன்று பட்டணங்களையடைந்து மற்றும்பல அசுரர்களோடு அந்நகரங்களுடனே தாம் நினைத்தவிடங்களிற் பறந்துசென்று பல விடங்களின்மேலும் இருந்து அவ்விடங்களைப் பாழாக்கி வருகையில், அத்துன்பத்தைப் பொறுக்கமாட்டாத தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளினல் சிவபெருமான் பூமியைத் தேராகவும் சந்திரஸூர்யர்களைத் தேர்ச்சக்கரங்களாகவும் நான்கு வேதங்களை நான்கு குதிரைகளாகவும் பிரமனைச் சாரதியாகவும் மஹாமேருவை வில்லாகவும் ஆதிசேஷனை வில்நாணியாகவுங் கொள்ள, வாயுவாகிய சிறகமைந்த அக்னியை முனையாகவுடைய அம்பின் ஸ்தானத்திலே விஷ்ணுநிற்க, இவ்வளவு அமைப்புடனே யுத்தஸன்னத்தனய்ச் சென்று போர் தொடங்கும்போது சிரித்து, அச்சிரிப்பில் நின்று உண்டான நெருப்பினல் அவ்வசுரர்களை அந்நகரங்களுடனே எரித்திட்டனன்.

இந்த த்ரிபுரஸம்ஹாரஞ் செய்தது சிவனேயாகிலும் இது நிறைவேறியதற்கு முக்கியகாரணம் திருமாலேயென்க. மஹாபாரதத்தில் கர்ணபருவத்தில் இருபத்திநாலாமத்தியாயம் முதலாக நான்கு அத்தியாயங்களில் இவ்வரலாறு விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. அங்கு "[illegible]" [சிந்தயித்வா ஹரிம் விஷ்ணுமவ்யயம் யஜ்ஞவாஹநம், சரம் ஸங்கல்பயாஞ் சக்ரே விச்வகர்மா மஹாமநா:] என்றும், "[illegible]" [விஷ்ணுராத்மா பகவதோ பவஸ்யாமிததேஜஸ:, தஸ்மாத் தநுர்ஜ்யாஸம்ஸ்பர்சம் ஸ விஷேஹே சரஸ்ய வை] என்றுமுள்ள ச்லோகங்கள் காண்க. எம்பெருமான் ருத்ரமூர்த்திக்கு அந்தராத்மாவாக இருந்ததனலும் அம்பாக அமைந்ததனலும் இக்காரியம் எளிதாகக் கைகூடிற்றென்கை. கீழே முதற்பத்தில் முதற்றிருவாய் மொழியில் எட்டாவது பாசுரத்தில் "புரமொருமூன்றெரித்து" என்று த்ரிபுரதஹனத்தை எம்பெருமானுடைய காரியமாகவே ஆழ்வாரருளிச் செய்ததும் இதுபற்றியே.

இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்திகாண்மின்;—" கடல் கடைகிறபோது எட்டுவடிவு கொண்டு நின்று கடைந்தாப்போலே த்ரிபுரதஹந ஸமயத்திலே வில்லுக்குமிடுக்கும் நாணிக்குத் திண்மையாயும் அம்புக்குக் கூர்மையாயும் தனக்கு அந்தராத்மாவாயும் எதிரிகளைத் தலை சாயும்படி பண்ணி த்ரிபுரத்தையழித்துக் கொடுத்தான். அத்தையறியாதே அஜ்ஞரானவர்கள் இத்தை அவன் தலையிலே வைத்துக் கவிபாட இத்தைத் தானுங்கேட்டு, மெய்யிறேயென்று மயங்கி 'அது செய்த நமக்கு இவனை வெல்லத்தட்டென்?' என்று வந்து எதிரிட்டானயிற்று.—இத்தால் சொல்லிற்றாயிற்று ருத்ரன் தன்னை அபாச்ரயமாகப் பற்றினரை ஆபத்து வந்தவாறே காட்டிக்கொடுத்து ஓடுமென்னுமிடமும், ஸர்வேச்வரன் தன்னைப்பற்றினரை எல்லாவளவிலும் ரக்ஷிக்குமென்னுமிடமும்."

"பற்றி யான்இறையேனுமிடரிலனே" என்றவிடத்து ஈடு:— "பேரனென்றிருக்கையாலே அநிருத்தாழ்வானுக்கு நாலுநாள் சிறையிலிருக்க வேண்டிற்று; அடியேனென்று பற்றினவெனக்கு அதுவும் வேண்டிற்றில்லை." (ரு)

இடரின்றியே யொருநாளொருபோழ்தில் எல்லாவுலகும்கழிய *
படர்புகழ்ப்பார்த்தனும்வைதிகனும் உடனேறத்திண்டேர்கடவி *
சுடரொளியாய்நின்றதன்னுடைச்சோதியில் வைதிகன்பிள்ளைகளை *
உடலொடும்கொண்டுகொடுத்தவனைப்பற்றி ஒன்றும்துயரிலனே. (௬)

ஒரு நாள்	ஒருநாளிலே	படர் புகழ் பார்த்தனும்	பரம்பினபுகழையுடைய அர்ஜுநனும்
ஒரு போழ்தில்	ஓர் அவஸரத்திலே	வைதிகனும்	வைதிகப்பிராமணனும்
எல்லா உலகும் கழிய	எல்லா வுலகங்களுக்கும் அப்பால் போம்படியாக,	உடன் ஏற	கூடவேறிவரும்படி

இடர் இன்றியே	இடைஞ்சல் ஒன்றுமின்றி	வைதிகன் பிள்ளைகளை	அந்த வைதிகனுடைய பிள்ளைகள் நால்வரையும்
திண் தேர் கடவி	திடமான திருத்தேரைச் செலுத்தி.	உடலொடும்	அவ்வுடம்போடே
சுடர் ஒளி ஆய் நின்ற	மிகவும் சிறந்த தேஜோமயமாயிராநின்ற	கொண்டு கொடுத்தவனை	மீட்டுக்கொணர்ந்து கொடுத்தருளின பெருமானை
தன்னுடை சோதியில்	தன்னுடையதாய், பரஞ்சோதியெனப்படுமதான திருநாட்டிலே	பற்றி	அடைந்து (அதனால்)
		ஒன்றும் துயர் இலன்	சிறிதும் துயரமுடையேனல்லேன்.

* * * [இடரின்றியே] வைதிகன் பிள்ளைகளைக் கொணர்ந்து கொடுத்த அதிமாநுஷ சேஷ்டிதத்தை அநுஸந்தித்து, இங்ஙனே அரியன செய்தும் அடியார்களைக் காத்தருளவல்ல பெருமானைப்பற்றின வெனக்கு யாதொரு துயருமில்லை யென்கிறார்.

ஒரு பிராமணனுக்கு முறையே பிறந்த மூன்று பிள்ளைகள், பிறந்த அப்பொழுதே பெற்றவர்களுமுட்பட முகத்தில் விழிக்கப்பெறாதபடி இன்னவிடத்திலே போயிற்றென்று தெரியாமல் காணவொண்ணாது போய்விடுகையாலே, நான்காம் பிள்ளையை மனைவி ப்ரஸவிக்கப் போகிறவளவிலே அந்த அந்தணன் கண்ணபிரானிடம் வந்து 'இந்த ஒரு பிள்ளையையாயினும் தேவரீர் பாதுகாத்துத் தந்தருளவேண்டும்' என்று பிரார்த்திக்க, கிருஷ்ணன் 'அப்படியே செய்கிறேன்' என்று அநுமதி செய்த பின்பு, ஒரு யாகத்திலே தீக்ஷிதனாயிருந்த கண்ணபிரான் எழுந்தருளக் கூடாதென்பதுபற்றி அர்ஜுநன் நானே போய் ரக்ஷிக்கிறேனென்று பிரதிஜ்ஞை பண்ணி, பிராமணனையுங் கூட்டிக்கொண்டு போய், பிரஸவிக்கிற கிருஹத்தைச்சுற்றும் காற்றுமுட்படப்பிரவேசிக்க வொண்ணாதபடி சரக்கூடங்கட்டிக் காத்துக்கொண்டு நிற்கையில், பிறந்த பிள்ளையும் வழக்கப்படியே பிறந்தவளவிற் காணவொண்ணாது போய்விடவே, பிராமணன் வந்து அர்ஜுநனை மறித்து 'க்ஷத்ரியாதமா! உன்னாலன்றோ என்பிள்ளை போம்படியாயிற்று; கிருஷ்ணன் எழுந்தருளிக் காப்பதை நீயன்றோ தடுத்தாய்' என்று நிந்தித்துக் கிருஷ்ணன் பக்கலிலே இழுத்துக்கொண்டுவர, கண்ணபிரான் கண்டு புன்சிரிப்புக்கொண்டு 'அவனை விடு, உனக்குப் பிள்ளையை நான் கொணர்ந்து தருகிறேன்' என்றருளிச்செய்து, பிராமணனையும் அர்ஜுநனையும் தன்னுடன் கொண்டு தேரிலேறி, அர்ஜுநனைத் தேர்செலுத்தச் சொல்லி, அத்தேர்க்கும் அவர்கட்கும் திவ்யசக்தியைத் தனது ஸங்கல்பத்தாற் கல்பித்து இவ்வண்டத்துக்கு வெளியே நெடுந்தூரமளவுங் கொண்டுபோய், அங்கு ஓரிடத்தில் தேருடனே இவர்களை நிறுத்தி, தேஜோரூபமான பரமபதத்திலே தன்நிலமாகையாலே தானே போய்ப்புக்கு, அங்கு நாச்சிமார் தங்கள் ஸ்வாதந்திரியம் காட்டுகைக்காகவும் கண்ணபிரானது திவ்ய ஸௌந்தர்யத்தைக் கண்டு களிக்கைக்காகவும் அழைப்பித்துவைத்த அந்தப்பிள்ளைகள் நால்வரையும் அங்குநின்றும் பூர்வரூபத்தில் ஒன்றுங்குலையாமற் கொண்டுவந்து கொடுத்தருளினனென்ற வரலாறு இப்பாசுரத்திலடங்கியது.

மீளாவுலகமாகிய பரமபதத்திற் சென்றவர்கள் மீண்டனரென்பது எங்ஙனே கூடுமென்கிற சங்கைக்குப் பெரியோர்கள் இங்குப் பலவிதமாக ஸமாதானங் கூறுவர்கள்: அர்ச்சிராதிமார்க்கத்தாற் சென்றவர்கள் திரும்பிவருதலில்லையென்றும், அதுவும் அவர்களுடைய சுதந்திரமான இச்சையினால் இல்லையென்றும் இங்கு முக்கியமாக வுணர்க.

" உடலொடுங் கொண்டு கொடுத்தவனை " என்றவிடத்தை பட்டர் உபந்யஸித்தருளும்போது " பூசின மஞ்சளும் உடுத்தின பட்டும் இட்ட சவடிப்பூணூலும் இட்ட காதுப்பணி" களுமான வொப்பனையில் ஒன்றுங் குறையாதபடி கொண்டுவந்து கொடுத்தவனென்றருளிச் செய்தாராம்: அது கேட்டவர்கள் " இப்பிள்ளைகள் பிறந்தக்ஷணத்திலேயே கொண்டுபோகப்பட்டார்களாகவன்றோ சொல்லுகிறது; அப்போது இவையெல்லாம் இருக்க ப்ரஸக்தி யில்லையே " என்று பட்டரிடம் விஜ்ஞாபிக்க, " ரிஷிபுத்திரர்களாகையாலே பிறக்கிறபோதே அவற்றோடே பிறப்பர்காணும் " என்றருளிச் செய்தாராம். ரஸோக்தியிருந்தபடி. .... (ரு)

துயரில்சுடரொளிதன்னுடைச்சோதி நின்றவண்ணம்நிற்கவே *
துயரில்மலியும்மனிசர்பிறவியில் தோன்றிக்கண்காணவந்து *
துயரங்கள்செய்துதன்தெய்வநிலையுலகில் புகவுய்க்குமம்மான் *
துயரமில்சீர்க்கண்ணன்மாயன்புகழ்துற்ற யானோர்துன்பமிலனே. (சூ)

துயர் இல்	துன்பமற்றதும்	தன் தெய்வம் நிலை	தன்னுடைய அப்ராக்ருத ஸ்வபாவத்தை
சுடர் ஒளி	சிறந்த தேஜோரூபமுமான	உலகில்	இவ்வுலகத்தின் கண்
தன்னுடை சோதி	தன்னுடைய விக்ரஹமானது	புக உய்க்கும்	பிரசுரப்படுத்தின
நின்ற வண்ணமே நிற்க	அங்கு இருக்கும்படியிலொன்றுங்குறையாமே நிற்கும்படியாக,	அம்மான்	ஸ்வாமியாய்
துயரில் மலியும் மனிசர் பிறவியில் தோன்றி	துக்கத்திலேயமிழ்ந்தின மனிதருடைய யோனிகளிலே பிறந்து	துயரம் இல் சீர்	ஹேய குணங்கள் இன்றிக்கே கல்யாண குணமயனாய்
கண் காண வந்து	(அனைவரும்) கண்ணாற் காணும்படியாக வந்து	மாயன்	ஆச்சர்ய சக்தியுக்தனான
துயரங்கள் செய்து	(அனைவரையும்) ஈடுபடுத்தி	கண்ணன்	கண்ணபிரானுடைய
		புகழ்	கீர்த்திகளை
		துற்ற யான்	அநுபவிக்கப்பெற்ற நான்
		ஓர் துன்பம் இலன்	ஒரு துன்பமுமுடையேனல்லேன்,

* * * [துயரில் சுடரொளி] தன்னுடைய அப்ராக்ருதமான திவ்யமங்கள விக்ரஹத்தை இதரஸஜாதீயமாக்கி ஸம்ஸாரிகளின் கட்புலனுக்கு இலக்காக்கி வைத்த கண்ணபிரானுடைய திருக்குணங்களை அநுபவிக்கப் பெற்றவெனக்கு ஒரு துன்பமுமில்லை யென்கிறார்.

எம்பெருமான் மத்ஸ்யகூர்மாதி அவதாரங்களையும் ராமக்ருஷ்ணாதி அவதாரங்களையும் செய்தருளினகாலத்து ஏற்றுக்கொண்ட திருமேனியானது நம்

போன்றவர்களின் உடல்போல மாம்ஸாதிமயமாகத் தோன்றியிருந்தாலும் உண்மையில் அப்படிப்பட்டதன்று; பரமபதத்தில் அப்ராக்ருதமாகவுள்ள திவ்யமங்கள விக்ரஹத்திற்கும் விபவாவதாரங்களில் பரிக்ரஹிக்கப்பட்ட திருமேனிக்கும் சிறிதும் வேற்றுமையில்லை—என்னுமிடம் முன்னடிகளிற் கூறப்பட்டது. கீழும் (3-5-5) "ஆதியஞ்சோதியுருவை அங்குவைத்திங்குப்பிறந்த" என்றருளிச் செய்தது நினைக்க. பகவத்கீதையிலும் நான்காமத்யாயத்தில் „ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாமி— ப்ராக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாமி" என்றது காண்க.

"மனிசர்பிறவியில்" என்றதை உபலக்ஷணமாகவுங் கொள்ளலாம்; எந்நின்ற யோனியுமாய்ப் பிறப்பவனுதலால்.

எம்பெருமானார் பெரும்பாலும் இந்தப் பாசுரந்தன்னையே திருவுள்ளத்திற் கொண்டு கீதாபாஷ்ய ப்ரவேசத்தில் „ஸ்வகீயஸ்வரூபநய ந விஷயதாம் கத:" இத்யாதி ஸ்ரீஸூக்திகளை யருளிச் செய்தாரென்றுணர்க.

துயரங்கள் செய்து = துயரங்களைத் தீர்ப்பதற்காக வந்து அவதரித்திருக்கச் செய்தே 'துயரங்கள் செய்து' என்னலாமோ வென்னில்; இங்கே நம்பிள்ளை யீடு காண்மின்: "அநுகூலரை அழகாலே நோவுபடுத்தியும், ப்ரதிகூலரை ஆயுதத்தாலே நோவுபடுத்தியும்."

உலகில் தன்தேய்வநிலை புகவய்க்கு மம்மான் = பரமபதத்திலே நடையாடுகின்ற ஸ்வபாவத்தை ஸம்ஸாரிகளுக்குத் தெரிவித்தவன் என்றபடி. தூது போயும் தேரோட்டியாயிருந்தும் தன்படியைத் தெரிவித்தவன் என்னவுமாம். இப்படிப்பட்ட எம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களை நெருங்க அனுபவிக்கப் பெற்ற எனக்கு எவ்வகைத் துன்பமுமில்லை யென்றாராயிற்று.

துற்ற — துற்றிய என்றபடி. .... (சு)

துன்பமுமின்பமுமாகிய செய்வினையாயுலகங்களுமாய் *
இன்பமில்வெந்நரகாகி இனியநல்வான்சுவர்க்கங்களுமாய் *
மன்பல்லுயிர்களுமாகிப் பலபலமாயமயக்குக்களால் *
இன்புறுமிவ்விளையாட்டுடையானைப்பெற்று ஏதுமல்லலிலனே. (ஏ)

துன்பமும் இன்பமும் ஆகிய	துக்கத்திற்கும் சுகத்திற்கும் காரணமாகக்கூடிய
செய் வினை ஆய்	புண்ய பாபரூப கருமங்களுக்கு நிர்வாஹகனாய்
உலகங்களும் ஆய்	உலகங்களுக்கும் நிர்வாஹகனாய்
இன்பம் இல் வெம் நரகு ஆகி	இன்பமற்ற கொடிய நரகலோகத்திற்கும் நிர்வாஹகனாய்
இனிய நல் வான் சுவர்க்கங்களும் ஆய்	மிகவும் நன்றாய்ச்சிறந்த ஸ்வர்க்க ப்ரதேசங்களுக்கும் நிர்வாஹகனாய்
மன் பல் உயிர்களும் ஆகி	நித்யரான பல பிராணிகளுக்கும் நிர்வாஹகனாய்
பல பல மாயம் மயக்குக்களால்	பலவகைப்பட்ட ப்ரக்ருதி விகாரரூபமான மோஹ விகாரங்களாலே

இன்பு உறும் இ விளையாட்டு உடையானை	ரஸாவஹமான விளையாடல்களையுடையவனான எம்பெருமானை
பெற்று	அநுபவிக்கப் பெற்றதனால்
ஏதும் அல்லல் இலன்	சிறிதும் துக்கமுடையேனல்லேன்.

* * * [துன்பமுமின்பமுமாகிய.] புண்யபாப ரூபகருமங்களுக்கும், அவற்றைச் சம்பாதிப்பதற்குரிய இடமான லோகங்களுக்கும், அவற்றின் பலன்களை யனுபவிக்குமிடமான லோகங்களுக்கும், அப்பலன்களை அனுபவிக்குமவர்களான ஆன்மாக்களுக்கும் நியாமகனாய் லீலாரஸமநுபவிக்கின்ற எம்பெருமானை யுடையப் பெற்றதனால் ஒருவகையான அல்லலும் எனக்கில்லை யென்கிறார்.

"துன்பமுமின்பமுமாகிய செய்வினை" என்றது—துன்பங்களுக்குக் காரணமாயும் இன்பங்களுக்குக் காரணமாயுமுள்ள செய்வினை என்றபடி. துக்க ஹேதுவான பாபங்களையும், ஸுக ஹேதுவான புண்யங்களையும் சொன்னவாறு. புண்யபாபங்கள் எம்பெருமானிட்டவழக்கு என்றாராயிற்று. „யத்த்வத்ப்ரியம் ததிஹ புண்யமபுண்யமந்யத்—யத் த்வத்ப்ரியம் ததிஹ புண்யம் அபுண்யமந்யத்" (அதிமாநுஷஸ்தவம்) என்றார் கூரத்தாழ்வான்.

உலகங்களுமாய் = புண்யபாபங்களை ஆர்ஜிக்குமிடங்களும் எம்பெருமானிட்டவழக்கு என்றபடி.

பாபங்களின் பலன்களை யநுபவிக்குமிடமான நரகமும், புண்யங்களின் பலன்களை யனுபவிக்குமிடமான ஸ்வர்க்கம் முதலியலோகங்களும் எம்பெருமானிட்ட வழக்கு என்கிறது இரண்டாமடி. வான்—சிறந்த என்றபடி. நரகு—நரக: என்ற வடசொற்சிதைவு.

மன்பல்லுயிர்களுமாகி = புண்யபாப ரூபகருமங்களைச் செய்பவர்களும், பிறகு அவற்றின் பலன்களை யனுபவிப்பவர்களுமான உயிர்களும் அவனிட்ட வழக்கு என்கை. மன் என்றது ஆத்மாக்களின் நித்யத்வத்தைச் சொன்னபடி. பல் என்றது அவர்களின் எண்ணிறந்தமையைச் சொன்னபடி.

பலபலமாயமயக்குக்களால்இன்புறு மிவ்விளையாட்டுடையான் = "வணங்குந்துறைகள் பலபலவாக்கி மதிவிகற்பால் பிணங்குஞ்சமயம் பலபலவாக்கி, அவையவை தோறு அணங்கும் பலபலவாக்கி நின்மூர்த்திபரப்பிவைத்தாய்" (திருவிருத்தம்) என்கிறபடியே பலவகைப்பட்ட உபாயங்களையும் வேறு வேறு மதங்களையும் நானுவகைத் தெய்வங்களையுமுண்டாக்கி வைத்து இங்ஙனே லீலாரஸங் கொண்டாடுகின்ற எம்பெருமானுடைய லீலைகளையனுபவிக்கப் பெற்றதனால் ஒரு கிலேசமுமுடையேனல்லேன் என்றாராயிற்று.

"இன்புறு மிவ்விளையாட்டுடையான்" என்றவிடத்து „லோகவத்து லீலாகைவல்யம்" என்ற ப்ராஹ்மஸூத்ரம் ஸ்மரிக்கத்தக்கது. .... (ஏ)

அல்லலிலின்பமளவிறந்தெங்கும் அழகமர்சூழொளியன் *
அல்லிமலர்மகள்போகமயக்குக்கள் ஆகியுநிற்குமம்மான் *
எல்லையில்ஞானத்தன்ஞானமஃதேகொண்டெல்லாக்கருமங்களுஞ்செய் *
எல்லையில்மாயனைக்கண்ணனைத்தாள்பற்றி யானோர்துக்கமிலனே. (அ)

அல்லல் இல் இன்பம்	வருத்தம் சிறிதுங் கலசாத ஆனந்தகுணம்	எல்லை இல் ஞானத்தன்	எல்லையில்லாத ஞான விளக்கத்தையுடையனாய்
அளவு இறந்து	அளவில்லாமல் இருக்கப்பெற்று	ஞானம் அஃதே கொண்டு	அந்த ஞானத்தையே கருவியாகக் கொண்டு
எங்கும் அமர்	எங்கும் பரம்பின	கருமங்கள் எல்லாமும் செய்	காரிய வுலகங்களை யெல்லாம் உண்டாக்குமவனாய்
அழகு சூழ் ஒளியன்	ஸௌந்தர்யத்தோடு சேர்ந்த லாவண்யத்தையுடையவனாய்,	எல்லை இல் மாயனை	எல்லையில்லாத ஆச்சரிய சேஷ்டிதங்களையுடையவனான
அல்லி மலர் மகள்	தாமரைமலரில் தோன்றிய பெரிய பிராட்டியோடு	கண்ணனை	ஸ்ரீக்ருஷ்ணபரமாத்மாவை
போகம்	ஆனந்தானுபவத்தினாலுண்டாகிய	தாள் பற்றி	திருவடிதொழுது
மயக்குக்கள் ஆகியும் நிற்கும் அம்மான்	வியாமோஹமே வடிவெடுத்திருக்கின்ற பெருமானாய்,	யான் ஓர் துக்கம் இலன்	நான் ஒரு துக்கமுமுடையேனல்லேன்:

* * * [அல்லலிலின்பம்] முன்னிரண்டடிகளால் — திருநாட்டில் எம்பெருமான் எழுந்தருளியிருக்குமிருப்பையும், பின்னடிகளால்—அவன் இந்நிலத்தில் செய்தருளுஞ் செயல்களையும் பேசி, இப்படிப்பட்ட எம்பெருமானையடையப் பெற்றதனால் எனக்கு யாதொரு துக்கமுமில்லையென்கிறார்.

ஸ்வர்க்கலோகத்தில் ஸுகமுண்டு என்றாலும், அது துக்கம் கலந்த ஸுகமேயல்லது நிஷ்க்ருஷ்டமான ஸுகமன்று; ஏனெனில்; „ஸ்வர்கேபி பாதபீதஸ்ய க்ஷயிஷ்ணோர் நாஸ்தி நிர்வ்ருதி:—ஸ்வர்க்கேபி பாதபீதஸ்ய க்ஷயிஷ்ணோர் நாஸ்தி நிர்வ்ருதி:.'' என்கிறபடியே, மற்றொருவன் புண்யபலன்களை யனுபவித்து முடிந்தவாறே தலைகீழாகக் கீழே தள்ளப்படுவதைக் காணுமளவில் அனுபவிக்கின்ற இன்பமும் துன்பமாகவே தோற்றுமன்றோ. ஆதலால், அல்லலோடுகூடின இன்பமே சுவர்க்கம் முதலிய உலகங்களிலுமுள்ளதாம். திருநாட்டிலானந்தம் அப்படியன்றிக்கே நிஷ்க்ருஷ்டமான ஆனந்தமாயிருக்கும் படியை "அல்லலிலின்பமளவிறந்து'' என்றதனால் கூறினர். இங்கே நம்பிள்ளை யீடுகாண்மின் :—„ஸ்வர்க்காதிகளிற்போல ஸாவதிகமாய்ப் பரிச்சிந்நமாயிராதே ஸாவதிக ஸுகமாய் ஸுவைகதாநமாய் அபரிச்சிந்நமான ஆனந்தத்தையுடையவன்.''

எங்குமழகமர் சூழொளியன்= திருநாடடங்கலும் வெள்ளங்கோத்துப் பெருகுகின்ற காந்தியையுடையவன் என்றபடி. அவயவசோபையென்றும் ஸமுதாய சோபையென்றும் அழகு இருவகைப்படும்; அவையே, ஸௌந்தர்யமென்றும் லாவண்யமென்றும் வழங்கப்பெறும். இங்கு, அழகு ஒளி என்றவிவற்றால் அவை விவக்ஷிதம். "எங்கும்மழகமர் சூழொளியன்'' என்பதற்கு—திருவடி தொடங்கித் திருமுடியீறாக ஒவ்வொரு அவயவத்தையும் தனித்தனி நோக்குமளவில் 'இங்கே அழகு குடிகொண்டது, இங்கே அழகு குடிகொண்டது' என்னலாம்படி ஒவ்வோரிடத்திலே பரிபூர்ணமாப்தமான அழகுடையவன் என்றும் பொருள் கூறுவர்.

இவ்வழகு காட்டிலெறித்த நிலாவாகாதபடி அனுபவிப்பார் உண்டென்கிறது இரண்டாமடி. புஷ்பத்திற் பரிமளந்தானே ஒருவடிவு கொண்டாற்போலேயிருப்பவளான பிராட்டியோடே நித்ய ஸம்ச்லேஷம் பண்ணி அதனாலுண்டாகிய ஆனந்தமே வடிவெடுத்தாற் போன்றுளன் எம்பெருமான்—என்றவாறு. இயற்கையான ஆனந்தத்திற்கு மேலே இதுவும் ஒரு பரமானந்தம். ஈடு:—"தன்னுடைய ஆனந்தத்துக்கு மேலே ச்ரிய:பதித்வத்தால் வந்த ஆனந்தத்தை யுடையனாயிருக்கும்.''

எல்லையில்ஞானத்தன் = அந்தப் பிராட்டியோடு கலந்து பரிமாறுவதற்குப் பர்யாப்தமான ஞானபூர்த்தியை யுடையவன் என்றபடி. [ஞானமஃதே கொண்டு இத்யாதி.] பிராட்டியும் தானுமான சேர்த்தியிலே அவள் இங்கிதம் காட்ட அதை யுணர்ந்து அவளுடைய உகப்புக்காகப் பிரபஞ்சத்தைப் படைக்கின்றானெம்பெருமான் என்று ரஸோக்தியாக அருளிச் செய்கிறபடி. „யஸ்யா வீக்ஷ்ய முகம் ததிங்கித பராதீநோ விதத்தேகிலம்—"யஸ்யா வீக்ஷ்ய முகம் ததிங்கித பராதீநோ விதத்தேகிலம்.'' என்று ஆழ்வானும் ஸ்ரீஸ்தவத்திலருளிச் செய்தது இப்பாசுரம் நோக்கியே போலும்.

எல்லையில்மாயனைக்கண்ணனை= ஸங்கல்பரூப ஜ்ஞானத்தாலே ஸ்ருஷ்டி முதலிய ஸகலத்தையும் நிர்வஹிக்க வல்லவனாயிருந்துவைத்து, ஸ்ரீக்ருஷ்ணனாய் நேர்கொடுநேரே வந்து பிறந்து அனைவரையும் மோஹிப்பித்த பெருமானைப் பற்றினவெனக்கு ஒரு துக்கமுமில்லை யென்றாராயிற்று. .... (அ)

துக்கமில்ஞானச்சுடரொளிமூர்த்தி துழாயலங்கல்பெருமான் *
மிக்கபல்மாயங்களால்விகிர்தம்செய்து வேண்டுமுருவுகொண்டு *
நக்கபிரானோடயன்முதலாக எல்லாருமெவையும் * தன்னுள்
ஒக்கவொடுங்கவிழுங்கவல்லானைப்பெற்று ஒன்றும்தளர்விலனே. (கூ)

துக்கம் இல் ஞானம்	அஜ்ஞானம் கலசாத ஞானத்தையுடையனாய்	அயன்	பிரமனும்
		முதல் ஆக	முதலாக
சுடர் ஒளி மூர்த்தி	மிகுந்த தேஜோரூபமான விக்ரஹத்தையுடையனாய்	எல்லாரும்	சேதநர்களெல்லாரையும்
		எவையும்	அசேதனங்களெல்லாவற்றையும்
துழாய் அலங்கல் பெருமான்	திருத்துழாய் மாலையணிந்த பெருமானாய்,	ஒக்க	ஒரு சேர
மிக்க பல் மாயங்களால்	மிகப் பலவகைப்பட்ட ஆச்சரிய சக்திகளாலே	தன்னுள் ஒடுங்க	தனக்குள்ளடங்குமாறு
வேண்டும் உருவு கொண்டு	இஷ்டமான உருவங்களைப் பரிக்ரஹித்து	விழுங்க வல்லானை பெற்று	(பிரளய காலத்தில்) விழுங்கி ரக்ஷிக்கவல்லவனான எம்பெருமானை யடைந்ததனால்
விகிருதம் செய்து	விலக்ஷணசேஷ்டிதங்களைச் செய்யுமவனாய்,		
நக்கபிரானோடு	இகம்பரச் சாமியான சிவபெருமானும்	ஒன்றும் தளர்வு இலன்	சிறிதும் தளர்ச்சியுடையேனல்லேன்

* * * [துக்கமில்ஞானம்.] எவ்விதமான ஹேயமுமில்லாதவனாய் ஸர்வஜ்ஞனாய் மாசமறுவற்ற தேஜோமய திவ்யரூபனாய், அதற்குமேலே திருத்துழாய் மாலை

மணிந்து தன் பெருமையெல்லாம் தோற்ற விளங்குமவனாய், தன்னுடைய விசித்ர சக்திகளாலே தனக்கு விருப்பமான திவ்யரூபங்களைப் பரிக்ரஹித்து அற்புதமான திவ்ய சேஷ்டிதங்களைச் செய்து போருமவனாய், "நளிர்மதிச் சடையனும் நான்முகக் கடவுளும், தளிரொளியிமையவர் தலைவனுமுதலா யாவகையுலகமும் யாவருமகப்பட, நிலநீர்த்தீகால் சுடரிருவிசும்பும் மலர்சுடர் பிறவும் சிறிதுடன் மயங்க, ஒரு பொருட் புறப்பாடின்றி முழுவது மகப்படக் கரந்து, ஓராலிலைச்சேர்ந்த எம்பெருமாமாயன்" (திருவாசிரிய.) என்கிறபடியே சிவன் பிரமன் முதலாய எல்லாரையும் மற்றுமெல்லாப் பொருள்களையும் பிரளயங் கொள்ளாமே திருவயிற்றிலே வைத்து ரக்ஷிக்குமவனை எம்பெருமானை நான் அடையப் பெற்றதனால் ஒரு தளர்வுமுடையே னல்லேன் என்றாராயிற்று.

இரண்டாமடியை "மிக்கபன்மாயங்களால் வேண்டுமுருவு கொண்டு விகிருதஞ் செய்து" என்று அந்வயிப்பது. விகிருதம் என்றது விலக்ஷண சேஷ்டைகள் என்றபடி. வடசொல்.

நக்கன் + பிரான், நக்கபிரான். நக்நஃ என்ற வடசொல் நக்கனெனத் திரிந்தது. .... (கூ).

தளர்வின்றியேயென்றுமெங்கும்பரந்த தனிமுதல்ஞானமொன்ருய் *
அளவுடையைம்புலன்களறியாவகையால் அருவாகிநிற்கும் *
வளரொளியீசனைமூர்த்தியைப் பூதங்களைந்தையிருசுடரை *
கிளரொளிமாயனைக்கண்ணனைத்தாள்பற்றி யானென்றும்கேடிலனே.

என்றும்	எக்காலத்திலும்
எங்கும்	எவ்விடத்திலும்
தளர்வு இன்றியே	ஆயாஸமில்லாமல்
பரந்த	வியாபித்திருக்குமவனாய்,
தனி முதல் ஞானம் ஒன்று ஆய்	அத்விதீயமாய் ஸமஸ்த காரணமான ஞானமே வடிவெடுத்தவனாய்,
அளவு உடை	அளவுபட்ட
ஐம்புலன்கள்	இந்திரியங்கள் ஐந்தினாலும்
அறியா வகையால்	அறியக் கூடாதபடி
அரு ஆகி நிற்கும்	நிரவயவஸ்வரூபனாயிருக்குமவனாய்,
வளர் ஒளி ஈசனை	வளர்கின்ற வொளியையுடைய ஸ்வாமியாய்
மூர்த்தியை	விலக்ஷண விக்ரஹயுக்தனாய்
பூதங்கள் ஐந்தை	பஞ்சபூத நிர்வாஹகனாய்
இரு சுடரை	சந்த்ர ஸூர்ய நிர்வாஹகனாய்,
கிளர் ஒளி மாயனை	ஒளிபொருந்தி மேன்மேலுங் கிளர்கின்ற ஆச்சர்ய சேஷ்டைகளையுடையனை
கண்ணனை	கண்ணபிரானை
தாள் பற்றி	திருவடி தொழப்பெற்றதனால்
யான் என்றும் கேடு இலன்	யான் ஒருநாளும் கேடு உடையேனல்லேன்.

* * * [தளர்வின்றியே.] அனைவர்க்கும் அந்தராத்மபூதனை ஸ்ரீக்ருஷ்ணனைப் பற்றின நான் ஒரு அழிவையுடையேனல்லேனென்கிறார். "தளர்வின்றியே யென்றுமெங்கும் பரந்த" என்றது எம்பெருமானுக்கு விசேஷணம். எல்லாக்

காலத்திலும் எல்லாவிடத்தும் தன்னுடைய நியாமகத்வசக்திக்குத் தளர்த்தியில்லாத பூர்த்தியோடே வியாபித்திருக்குமவன் என்றபடி. "தனிமுதல் ஞானமொன்ருய்" என்றது—ஸகலப்ரபஞ்சஸ்ருஷ்டிக்கும் வேறொருகருவி வேண்டாதபடி ஸங்கல்பரூப ஜ்ஞானமொன்றையே அத்விதீய ஸாதனமாகவுடையவன் என்றபடி. தனிமுதல் என்பதையும் எம்பெருமானுக்கே அடைமொழியாக்குதலுமுண்டு.

செவி வாய் கண் மூக்குடலென்னும் ஐம்புலன்கள் அற்பவிஷயங்களை க்ரஹிக்கவல்லவையேயன்றி, அபரிச்சிந்ந விஷயமான எம்பெருமானை க்ரஹிக்க முடியாதவை. உழக்காலே கடலை முகக்க வொண்ணாதாப்போலே ஐம்புலன்களால் அறிய வொண்ணாதபடி அவற்றுக்கு அவிஷயமாயிருப்பன் என்கிறது இரண்டாமடியால். அளவுடையைம்புலன்களென்றது—அளவுபட்ட விஷயங்களை க்ரஹிக்கவே ஏற்பட்ட பஞ்சேந்திரியங்களென்றபடி.

சேதநா சேதநங்களோடே கலசியிருக்கச் செய்தேயும் அவற்றின் தோஷங்கள் தன்பக்கலில் தட்டாமல் ஒளிமல்கி யிருக்கும்படியைக் கூறுவது "வளரொளியீசனை" என்பது. அஸாதாரண திவ்ய விக்ரஹ முடைமை சொல்லுகிறது மூர்த்தியை என்று. .... (கo)

கேடில்விழுப்புகழ்க்கேசவனைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன *
பாடலோராயிரத்துள் இவையுமோருபத்தும்பயிற்றவல்லார்கட்கு * அவன்
நாடுநகரமும்நன்குடன்காண நலனிடையூர்திபண்ணி *
வீடும்பெறுத்தித்தன்மூவுலகுக்கும்தரும் ஒருநாயகமே. (கக)

கேடு இல்	ஒருநாளுமழிவில்லாத
விழு புகழ்	சிறந்த புகழையுடையனை
கேசவனை	எம்பெருமான் விஷயமாக
குருகூர் சடகோபன் சொன்ன — ;	
பாடல் ஓர் ஆயிரத்துள்	ஓராயிரம் பாசுரங்களினுள்ளே
இவையும் ஒரு பத்தும்	இப்பதிகத்தை
பயிற்ற வல்லார்கட்கு	ஓதவல்லவர்களுக்கு
அவன்	அந்த எம்பெருமான்,
நாடும் நகரமும்	சிறியார் பெரியாரென்றிற வாசியின்றிக்கே அனைவரும்
நன்குடன் காண	நன்றாகக் காணும்படி
நலன் இடை ஊர்தி பண்ணி	பகவத் பாகவத விஷயத்தில் அடிமைச் செல்வத்தோடே நடக்கும்படி பண்ணி
வீடும் பெறுத்தி	மோக்ஷானந்தத்தையும் அடைவித்து
தன் மூ உலகுக்கும்	தன்னுடையதான மூவுலகங்கட்கும்
ஒரு நாயகம்	ஏகாதிபதியாயிருக்கும் சிறப்பையும்
தரும்	தந்தருள்வன்.

* * * [கேடில்விழுப்புகழ்.] இத்திருவாய்மொழி கற்றார்க்குப் பயனுரைத்துத் தலைக்கட்டுகிறார். நித்யஸித்த கல்யாணகுண பூஷிதனை எம்பெருமான் விஷய

மாக ஆழ்வாரருளிச் செய்த ஆயிரத்தில் இப்பத்துப் பாசுரங்களையும் ஓதவல்லவர்கட்கு உபயவிபூதி ஸாம்ராஜ்யமும் குறையற உண்டாம்படி எம்பெருமான் அநுக்ரஹம் செய்த நல்வன் என்றாராயிற்று.

பயிற்றவல்லார்—தாங்கள் ஓதுமவர்கள், பிறரை ஓதுவிக்குமவர்கள் என்ற இருவகைப் பொருளும் கூறுவர். .... (கக)

பத்தாந் திருவாய்மொழி உரை முற்றிற்று.

திருவாய்மொழி மூன்றும்பத்து முற்றுப் பெற்றது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

1. ப்ராதுர்ப்பாவாநுபாவாத். * சன்மம்பலபலசெய்து வெளிப்பட்டு.* அடியார்களைக் காத்தற்பொருட்டுப் பலபல அவதாரங்களைச் செய்தருளுஞ் சீர்மையைச் சொன்னபடி.

2. பரிஜநவிபவாத். * குறைவில்தடங்கடல்கோளரவேறி—கறையணி மூக்குடைப்புள்ளைக்கடாவி.* திருவனந்தாழ்வானைப் பள்ளியாகவும் பெரிய திருவடியை ஊர்தியாகவுங் கொள்ளுகைமுதலான பரிஜந ஸம்ருத்தியைச் சொன்னபடி.

3. பாவநாலங்க்ரியத்வாத் * மட்டவிழ் தண்ணந்துழாய் முடியானை * திருத்துழாய்மாலையாகிற பரிசுத்தமான அலங்காரமுடைமை சொன்னபடி.

4. ஜைத்ரவ்யாபாரயோகாத். * பரிவின்றி வாணனைக் காத்துமென்று இத்யாதி.* வாணாசுரனை ஆயிரந்தோளும் பொழிகுருதிபாயப் பங்கப்படுத்தின வெற்றித்தொழில் வல்லமையைச் சொன்னபடி.

5. அகடிதகடநாத். * வைதிகன் பிள்ளைகளை உடலொடுங் கொண்டு கொடுத்தவனை * பிறப்பகத்தே மாண்டொழிந்த பிள்ளைகளை நால்வரையும்

இறைப்பொழுதில் கொணர்ந்து கொடுத்த அகடிதகடந ஸாமர்த்தியத்தைச் சொன்னபடி.

6. தேவபாவப்ரஸித்தே:. * தன் தெய்வநிலையுலகில் புகவுய்க்குமம்மான்.* தன்னுடைய அப்ராக்ருதமான தெய்வத்தன்மையை நிலவுலகத்தில் கீதோபதேசம் முதலியவற்றால் பிரசுரப்படுத்தினமையைச் சொன்னபடி.

7. ஆச்சர்யக்ரீடநத்வாத். * இன்புறுமிவ்விளையாட்டுடையானை * அற்புதமான ஜகத்வ்யாபாரங்களை லீலையாகக் கொண்டிருக்குந் தன்மையைச் சொன்னபடி.

8. ஸரஸிஜநிலயாநந்தநாத். * அல்லிமலர்மகள் போகமயக்குக்களாகியும் நிற்குமம்மான். * பெரிய பிராட்டியாரைத் தான் உகப்பிப்பதும் அவளால் தான் உகப்பதுமான ஹௌப்ராவண்யம் சொன்னபடி.

9. சந்தவ்ருத்தே:. * வேண்டுமுருவு கொண்டு * இஷ்டமான திருவுருவங்களைப் பரிக்ரஹிக்குந் தன்மை சொன்னபடி.

10. ஐச்வர்யவ்யக்திமத்த்வாத். * தளர்வின்றியேயென்று மெங்கும்பரந்த இத்யாதி. * எல்லாவற்றிலும் அந்தராத்மாவாய் வியாபித்திருக்கை, ஸகலஜகத்காரணமாயிருக்கை, சேதநாசேதநங்களோடு கூடியிருக்கச் செய்தேயும் அவற்றின் தோஷங்கள் தன்பக்கலில் தட்டப்பெறாதிருக்கை முதலான சிறப்புடைமை சொன்னபடி. ஆக இப்படிப்பட்ட தன்மைகளினால், [கேசவம்] எம்பெருமானை. [அகசமநதநும்] பாவங்களைத் தீர்க்கும் திருமேனியை யுடையவனைக [வ்யாஜஹார] ஆழ்வார் இப்பதிகத்திலே அருளிச் செய்தாரென்றவாறு.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

மூன்றும்பத்தில் ஒவ்வொரு திருவாய் மொழியினுடையவும் ப்ரமேயத்தை ஸங்க்ரஹித்துக் கூறுவது இந்த ச்லோகம்.

[1. ஸௌந்தர்யபூம்நா.] * முடிச்சோதியில் அழகர் வடிவழகிலே யீடுபட்டமை. [2. தநுவிஹித ஜகத்க்ருத்யஸௌபாக்யயோகாத்.] * முந்நீர்ஞாலத்தில் தன்திருமேனியில் நின்றும் ஜகத்ஸ்ருஷ்டி முதலியவற்றைப் பண்ணினமை சொன்னபடி. [3. ஸ்வேச்சா ஸேவ்யாக்ருதித்வாத்.] * ஒழிவில் காலத்தில் தாம் நினைத்தபடியே ஸேவிக்கவுரியனாய்த் திருமலையில் ஸந்நிஹிதனானமை சொன்னபடி. [4. நிகிலதநுதயா] * புகழுநல்லொருவனில் ஸர்வசரீரகத்வம் சொன்னபடி. [5. உந்மாததாநார்ஹகாந்த்யா] * மொய்ம்மாம்பூம்பொழிலில்

"எம்மானைச் சொல்லிப்பாடி யெழுந்தும் பறந்தும்" இத்யாதியிற்படியே அடியார்களைப் பிச்சேற்றவல்ல அழகுடைமை சொன்னபடி. [6. **லப்யார்ச்சாவைபவத்வாத்**] * செய்யதாமரைக் கண்ணனில் "நெஞ்சினால் நினைப்பான்யவனவனாகும்" என்றதில் நோக்காக அர்ச்சாவதார ஸௌலப்யமநுஸந்தித்தமை சொன்னபடி. [7. **குணரஸிகத்ருஞ்ணோத்கர்ஷணுத்**] * பயிலுஞ்சுடரொளியில், தன்னுடைய குணங்களில் ஈடுபட்ட பாகவதர்களை ஸர்வோத்க்ருஷ்டராகப் பண்ணுமவனெம்பெருமான் என்றதைச் சொன்னபடி. [8. **அக்ஷக்ருஷ்ட்யா.**] * முடியானேயில், ஸகல இந்த்ரியங்களையும் ஆகர்ஷிக்குமவனென்றதைச் சொன்னபடி. [9. **ஸ்துத்யத்வாத்.**] * சொன்னால் விரோதத்தில், எம்பெருமானொருவனே துதிக்க வுரியவனென்றதைச் சொன்னபடி. [10. **பாபபங்காத்.**] * சன்மம்பலபலவில், குறைமுட்டுப் பரிவிடர் துயர்துன்பமல்லல் துக்கந்தளர்வு கேடுகளில்லாமையைச் சொன்ன முகத்தால் பாபங்களைப் போக்குமவனென்றதைச் சொன்னபடி.—ஆக ஒவ்வொரு பதிகத்திலும் இத்தகைய தன்மைகளை அருளிச் செய்ததனால் மூன்றும்பத்தில் எம்பெருமானுடைய **ஸாஹஸாஹமதநாசவம்** சொல்லிற்றாயிற்று. அநந்தகருணாநிதி திவ்யரூபனென்று ப்ரதிபாதிக்கையிலே மூன்றும்பத்துக்கு முழுநோக்கிறே. .... (*)

தூப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

ஸத்யோவதீர்ய ஸாவி திவ்யவபு: ஸ்வகீயம்
ஸ்ரீ தூக்ஷயஞ்ஜவிநாம்ஸ்வ ஶாணாநநஞ்ஜு ।
ஸ்வாசகா ஶாநி: ஸ்வவரிதாய்தயா நக்ஷிம்விசு
ஶாவம் உசெத்ருதிதாஶாம் ஶஸெ தாசெதாஷ ॥

(கருத்து.) எம்பெருமான் பலகாலும் இந் நிலவுலகில் திருவவதரித்துத் தன்னுடைய திவ்யமங்கள விக்ரஹத்தையும் திருக்கல்யாண குணகணங்களையும் ஸாக்ஷாத்கரிப்பிக்கும்படியை ஆழ்வார் பேசித்துதித்து, இவ்வகையாலே தாம் க்ருதார்த்தராகப் பெற்றமையால் தமக்கு யாதொரு குறையுமில்லையென்னுமிடத்தை மூன்றும் பத்தின் பத்தாந் திருவாய்மொழியில் கூறிக் களித்தாரென்றதாயிற்று. .... (*)

ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி நூற்றந்தாதி.

சன்மம் பலசெய்து தானிவ் வுலகளிக்கும்
நன்மையுடை மால்குணத்தை நாடோறும்—இம்மையிலே
ஏத்துமின்பம் பெற்றே னெனுமாறனை யுலகீர்!
நாத்தழும்ப வேத்துமொரு நாள்.

பதவுரை.

தான் பல சன்மம் செய்து	தானாகவே பல திருவவதாரங்களைப் பண்ணி	நாள் தோறும்	அநுக்ஷணமும்
இ உலகு	இந் நிலவுலகத்தை	ஏத்தும் இன்பம்	புகழ்ந்து பேசும்படியான இன்பத்தை
அளிக்கும்	காத்தருளுகையாகிற	பெற்றேன் எனும்	பெற்றேனென்று அருளிச் செய்த
நன்மை உடை	நன்மையை யுடையவனான	மாறனை	ஆழ்வாரை
மால்	எம்பெருமானுடைய	உலகீர்	உலகர்களே!
குணத்தை	திருக்கல்யாண குணங்களை	ஒரு நாள்	ஒருநாளாகிலும்
		நா தழும்ப	நாக்குத் தடிக்கும்படி
இம்மையிலே	இப்பிறப்பிலே	ஏத்தும்	நீங்கள் துதிப்பீர்களாக.

எம்பெருமான், கருமங்களுக்கு வசப்படாதவனாயினும் கருணைக்கு வசப்பட்டவனாதலால் அது காரணமாக "**அஜாயமாநோ பஹுதா விஜாயதே**" என்றும், "எந்நின்ற யோனியுமாய்ப்பிறந்தாய்" என்றும் சொல்லுகிறபடியே பல பல திருவவதாரங்களைச்செய்து இவ்வுலகத்தைக் காத்தருள்கின்றானென்பது முதலான அவனுடைய திருக்கல்யாணகுண ஸம்ருத்தியை இம்மையிலேயே வாயாரப்புகழ்ந்து பேசும் பாக்கியத்தை யான் பெற்றேனென்று பேரானந்தம் பொலியவருளிச்செய்த நம்ஆழ்வாரை, ஸம்ஸாரிகளே! நீங்கள் ஒருநாளாகிலும் நன்கு துதிப்பது நன்று என்றருளிச்செய்தாராயிற்று. .... (௩0)

மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்.

மூன்றும்பத்தின் அடிவரவு.

1. முடி கட்டுரைக்கில் பரஞ்சோதி மாட்டா வருந்தா தோதுவார் வாழ்த்து வார் மாருள, மழுங்கா மறையா வியப்பாய முந்நீர்.

2. முந்நீர் வன்மா கொல்லா சூழ்ச்சி, வந்தாய் நிற்பன் எஞ்ஞான்று மேவு, கூவித் தலைப்பெய் உயிர்க ளொழிவில்.

3. ஒழிவி லெந்தை யண்ண லீசன், சோதி வேங்கடம் சுமந்து குன்றம், ஓயும் வைத்தநாள் தாள்பரப் புகழும்.

4. புகழுங் கூவுமா பங்கயச் சாதி, அர்ந்தன் பாலெஃகோ வானவ ரொளி மணி, கண்ணனை யாவையுங் கூடிவண் மொய்ம்மா.

5. மொய்ம்மாந் தண்கடல் மலையை வம்பவிழ், சாது மனிசரும் நீர்மையில் வார்புனல், அமரர் கருமமும் நிர்ந்தவடி செய்ய.

6. செய்ய மூவர் பரவி வைம்மின், திரியும் தோற்ற வெழுமைக்குந் துயரமே, தஞ்சமா கடல்வண் கண்கள் பயிலும்.

7. பயிலு மாளும் நாதனை யுடையார், பெருமக்க ளளிக்கும் சன்மசன்ம நம்பனை, குலந்தாங் கடியார்ந்த வடியோங்கு முடியான்.

8. முடியான் நெஞ்சமே வாசகம் கைகளால், கண்களால் செவிகளால் ஆவியே கோலமே, கொள்வனன் பொருந்திய புலம்புசீர் சொன்னால்.

9. சொன்னா லுளனா வொழிவொன் றென்னவது, கொள்ளும் வம்மின் சேரும் வேயின், வாய்கொண்டு நின்று நின் றேற்குஞ் சன்மம்.

10. சன்மங் குறை முட்டுப் பரிவிடர் துயர் துன்பமல்லல் துக்கந் தளர்வு கேடிலொருநாயகம்.

—•• ❖ ••—

ஸ்ரீ:

மூன்றும்பத்தின் ஸாரமான கருத்து.

"தத்ஸ்ருஷ்ட்வா । ததேவாநுப்ராவிசத்." என்று உபநிஷத்திற் கூறியபடியே சேதநா சேதநவர்க்கங்கள் முழுவதையும் வியாபித்து ஸர்வவ்யாபகனென்றிருக்கும் ஸர்வேச்வரன், கீழிரண்டாம்பத்தில் [எம்மாவீட்டிலே] இவ்வாழ்வார் நிஷ்கர்ஷித்த மோக்ஷத்திற்குப் பலமான ஸ்வவிக்ரஹாநுபவத்தை இவர்க்குப் பண்ணுவிக்க, இவரும் அநுபவித்துத் தரித்து, அவ்வநுபவத்தினுண்டான உவப்பின் மிகுதியால் எல்லாவகைக் கைங்கரியங்களையும் செய்ய வேண்டும்படியான அபிநிவேசம் கரைபுரண்டவராய், அவ்வபிநிவேசத்திற்குத் தகுதியாக அவன் காட்டிக் கொடுத்த அவன்றன்னுடைய ஸர்வாத்மபாவத்தைப்பேசி அத்தால்வந்த ப்ரீதியின் உகளிப்பையுடையவராய், அந்த ப்ரீதி அவனளவில் நில்லாதே பாகவத சேஷத்வத்தில் எல்லையளவுஞ்சென்று அந்த பாகவதர்களுக்கு நிரூபகமான பகவத் வைலக்ஷண்யாநுஸந்தானத்தாலே, ஒரு கரணத்தின் வ்ருத்தியை மற்றொரு கரணம் ஆசைப்படும்படி சேதநஸமாதியையடைந்த கரணக்ராமமும் தாமும் தனித்தனியநுபவிக்க வேண்டும் பெருவிடாயையுடையராய், பிறரைத் துதிக்கமாட்டேனென்னும் உறுதியையுடையராய், எம்பெருமானையே ஏத்திப்புகழ்பவராய், பகவதநுபவத்திற்கு ஒருதடையுமற்று அளவிலாத ஆனந்தத்தை யுடையரானவர்,

"புண்டரீகாக்ஷனைச் ஸுரிஸேவ்யனை பெருமானை நம்மால் ஆச்ரயிக்கப்போமோ" என்று ஸம்ஸாரிகள் அஞ்சிக் கைவாங்காமல் மேல்விழுந்து ஆச்ரயிக்கும்படி கீழிரண்டுபத்தாலும் உபதேசித்த அவதார ஸௌலப்யம் பரத்வஸ்தாநீய மென்னலாம்படியான அர்ச்சாவதார ஸௌலப்யத்தை யுபதேசித்து, 'அர்ச்சிராதிகதியாலே திருநாட்டை யடைவிக்கவல்ல அவனைத் தவிர்த்துப் பிறரைத்துதிக்கையிலே தாழவிழிகை பயனற்றது; ஆனபின்பு நீங்கள் பகவான் திறத்தில் வாசிகமான அடிமையைச் செய்யுங்கோ'ளென்று நிஹீநவ்ருத்தியான இதர ஸேவையை நிவர்த்திப்பித்துத் தம்முடைய வ்ருத்தியான வாசிக கைங்கரியத்திலே மூட்டினார் மூன்றும்பத்தால்.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர் ஸ்வாமி இயற்றிய
திவ்யப்ரபந்த திவ்யார்த்ததீபிகையில்
திருவாய்மொழி—மூன்றும்பத்து
உரை முற்றுப்பெற்றது.

திருவாய்மொழி மூன்றாம்பத்துச் செய்யுளகராதி.

அச்சுதனமலன்	72	கொல்லாமாக்கோல்	29	பரிவின்றிவாணனை	207
அடியார்ந்தவையம்	146	கொள்வன்நான்	168	பாலென்கோ	74
அடியோங்கு	147	கொள்ளும்பயனில்லை	188	புகழுநல்லொருவன்	66
அண்ணல்மாயன்	48	கோலமேதாமரை	167	புகழொன்றுமால் (தி-நூ)	85
அமரர்தொழப்படுவானை	102	சன்மசன்மாந்தரம்	142	புலம்புசீர்	173
அல்லலிலின்பம்	213	சன்மம்பலசெய்து (தி-நூ)	221	பெருமக்களுள்	138
அளிக்கும்பரமனை	140	சன்மம்பலபல	202	பொருந்தியமா	171
ஆவியேஆரமுதே	166	சாதிமாணிக்கம்	71	மலையையெடுத்து	89
ஆளும்பரமனை	133	சாதுசனத்தை	92	மழுங்காத	15
இடரின்றியே	209	சுமந்துமாமலர்	56	மறையாய	18
ஈசன்வானவர்	49	சூழ்ச்சிஞானச்சுடர்	31	மனிசரும்மற்று	95
உடையார்ந்தவாடை	137	செய்யதாமரை	109	மாசூணாச்சுடர்	14
உயிர்களெல்லாம்	39	செய்யபாத்துவை (தி-நூ)	128	யாட்டாதேயாகிலும்	8
உளனாகவே	182	செவிகளாலார	164	முடிச்சோதியாய்	4
என்ஞானன்றுகாம்	34	சேருங்கொடை	191	முடியானைவை (தி-நூ)	175
எந்தைதந்தை	47	சொன்னூல்விரோதம்	178	முடியார்திருமலை (தி-நூ)	20
எழுமைக்கும்	119	சொன்மாலைவாழ் (தி-நூ)	200	முடியானேமூவுலகம்	152
என்னுவது	185	சோதியாகி	50	முட்டில்பல்போக	205
ஏற்கும்பெரும்புகழ்	198	தஞ்சமாகிய	122	முந்நீர்ஞாலம்	23
ஒழிவிலாக்காலம் (தி-நூ)	62	தண்கடல்	88	முன்னமழகர் (தி-நூ)	42
ஒழிவில்காலம்	44	தலைப்பெயகாலம்	38	மூவராகியமூர்த்தி	112
ஒழிவொன்றில்லாத	184	தளர்வின்றியே	216	மேவுதுன்பவினை	35
ஒளிமணிவண்ணன்	77	தாள்பரப்பி	61	மொய்ம்பாரும் (தி-நூ)	107
ஓதுவாரோத்து	11	திரியுங்காற்றோடு	116	மொய்ம்மாம்பூம்	87
ஓயுமூப்பு	59	தீர்ந்தவடியவர்	104	யாவையும்யவரும்	80
கடல்வண்ணன்கண்ணன்	124	துக்கமில்ஞானச்சுடர்	215	வந்தாய்போலே	32
கட்டுரைக்கில்	6	துயரமேதருதுன்ப	120	வம்பவிழ்	91
கண்கள்காண்டற்கு	125	துயரில்சுடரொளி	211	வம்மின்புலவீர்	190
கண்களால்காண	163	துன்பமுமின்பமுமாகிய	212	வருந்தாதவருந்த	10
கண்ணனைமாயன்	78	தோற்றக்கேடவை	117	வன்மாவை	27
கருமமும்கருமபலன்	103	நம்பனைஞாலம்	143	வாசகமே	157
கிரபன்கில்லேன்	33	நாதனைஞாலமும்	135	வாய்கொண்டு	194
குலந்தாங்குசாதிகள்	144	நின்றுநின்று	196	வார்புனல்	100
குறைவில்தடங்கடல்	204	நீர்மையில்நூற்றுவர்	97	வாழ்த்துவார்	13
குன்றமேந்தி	58	நெஞ்சமேநீள்நகராக	155	வானவராதி	76
கூடிவண்டறையும்	82	பங்கயக்கண்ணன்	69	வியப்பாய	19
கூவிக்கூவி	37	பயிலுஞ்சுடரொளி	130	வேங்கடங்கள்	52
கூவுமாறறிய	68	பயிலுந்திருமால் (தி-நூ)	150	வேயின்மலி	193
கேடில்விழுப்புகழ்	217	பரஞ்சோதி	7	வைத்தநாள்	60
கைகளாலாரத்தொழுது	159	பரவிவானவர்	114	வைம்பின்நும்	116

181. சரண்யமுகுந்தத்வம் உத்பலாவதகத்திலே ப்ரஸித்தம்.
182. மார்க்கபந்துசைத்யம் மோஹூரத்தே மடுவிடும்.

[திருக்கண்ணபுரத்தில் விளங்கும் குணம்.]

181. * மாலைநண்ணி என்கிற திருவாய்மொழியில் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற திருக்கண்ணபுரத்தில் ஶரண்யனுடைய முக்திபூமி ப்ரதத்வம் விளங்கும். "சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம்" என்ற பாசுரத்தை யடியொற்றி 'ஶரண்யன்' என்றார். "மரணமானால் வைகுந்தங் கொடுக்கும் பிரான்" என்ற (உயிர் நிலையான) ஸ்ரீஸூக்தியைப் பின்பற்றி முகுந்தத்வம் என்றார். [முகுந்தத்வமாவது—முக்திபூமிப்ரதத்வம்.]

"உத்பலாவதகே திவ்யே விமாநே வாஸ்ரேக்ஷண:। ஶௌரி ராஜஸஹம் வந்தே ஸதா ஸர்வாங்கஸுந்தரம்"—உத்பலாவதகே திவ்யே விமாநே புஷ்கரேக்ஷணம், ஶௌரிராஜமஹம் வந்தே ஸதா ஸர்வாங்கஸுந்தரம்." என்று (த்யான ச்லோகத்தில்) "உத்பலாவதகவிமானம்" என்று புராண ப்ரஸித்தியுள்ளதனால் 'உத்பலாவதகத்திலே' என்றார். [உத்பல—அவத்—அகம் என்று பகுத்து "முமுக்ஷுக்களை ரக்ஷிக்குமிடம்" என்று புராணத்திலேயே பொருள் விவரிக்கப்பட்டுளது. பலம் என்று மாம்ஸத்திற்குப் பெயர்; உத்பலர் என்று—மாம்ஸள தேஹராயிருக்கையன்றியே சரீர சோஷணத்தாலே உத்ருதமாம்ஸராய்க் கொண்டு தேஹத்தை உபேக்ஷித்திருக்கும் முமுக்ஷுக்களைச் சொன்னபடி. அவத்—ரக்ஷிக்கிற, அகம்—ஸ்தானம். இத்தலத்தில் விளங்குவதாக இங்குச் சொல்லப்படுகிற முகுந்தத்வமென்கிற குணத்தை நன்கு விளக்குவதாகும் உத்பலாவதகம் என்னுஞ் சொல். ஆனதுபற்றியே அந்தச் சொல்லால் இங்குக்கூறினா இக்குணத்தை இங்கு ஆழ்வார் அநுபவிப்பதற்கு முந்தியே புராணத்திலும் இது விளக்கப்பட்டுளதென்று காட்டுதற்கு ப்ரஸித்தம் என்றார். ... ...

[திருமோகூரில் விளங்கும் குணம்.]

182. * தாளதாமரை யென்ற திருவாய்மொழியில் மங்களாசாஸனஞ் செய்யப்பெற்ற திருமோகூரில், வழித்துணைவனான எம்பெருமானுடைய சீதளத்வமென்னும் குணம் விளங்கும். கீழே திருக்கண்ணபுரத்தில் விளங்கியபடி மோக்ஷப்ரதனான தன்னுடைய அநுக்ரஹத்தாலே மோக்ஷபூமிக்குப் போவார்க்கு "காளமேகத்தையன்றி மற்றொன்றிலம் கதி" "ஆத்தன் தாமரையடியன்றி மற்றிலமரண்" என்னும்படி ஆப்தனைக் கூடக்கொண்டுபோம் வழித்துணைவனானவனுடைய "சுரிகுழல் கமலக் கட்கனிவாய்க் காளமேகம்" என்றும் "அவனடி நிழல்தடம்" என்றும் "மரதகமணித்தடம்" என்றும் சொல்லும்படியிருந்துள்ள ஸாம்ஸாரிக ஸகலதாபங்களையும் தீர்ப்பதாகிற சைத்யம் திருமோகூரில் நிறைந்து நிலைபெற்றிருக்கும்.

183. ஸஸைந்யபுத்ரசிஷ்ய-ஸாத்யஸித்தபூஸுரார்ச்சனத்துக்கு முகநாபிபாதங்கள் த்வாரத்ரயத்தாலே காட்டும் ஸாம்யம் அநந்தசயநத்திலே வ்யக்தம்.

இவ்வூர்த் திருப்பதிகத்தில் "தயரதன் பெற்ற மரதகமணித்தடம்" என்றதற்குப் பொருத்தமாக மடுவிடும் என்றார். தேவர்களுக்கு அமுதமளிக்கும் ஸமயத்தில் அசுரர்களை மோஹிப்பித்த அபதானத்தோடே ஸேவைஸாதிக்கும் இத்தலத்திற்கு மோஹனக்ஷேத்ரமென்று புராணப்ரஸித்தி. மோகூரென்பது தமிழ் வழக்கு.

[திருவனந்தபுரத்தில் விளங்கும் குணம்.]

183 * கெடுமிடராய வெல்லாம் என்கிற திருவாய்மொழியில் மங்களாசாஸனஞ் செய்யப்பெற்ற அனந்தசயனத்தில், நித்யஸூரிகள் ஸம்ஸாரிகளென்று வாசிபாராத ஸாம்யகுணம் விளங்கும். இத்தலம் திருமுகமும் திருநாபியும் திருவடிகளுமாகிற விவற்றைத் திருவாசல் மூன்றினால் காட்டும் தலமாதலால் "முகநாபி பாதங்கள் த்வாரத்ரயத்தாலே காட்டும்" எனப்பட்டது. இத்திருப்பதியில் மூன்றுவகைப்பட்ட அதிகாரிகள் வந்து பணிவதாக ஆழ்வார் அருளிச் செய்திருக்கிறார். எங்ஙனே யென்னில்; "அனந்தபுரத்து, அமரர்கோன் அர்ச்சிக்கின்று அங்ககப்பணி செய்வர் விண்ணோர்" என்ற பாசுரத்தினால் நித்யஸூரிகளில் தலைவரான ஸேனை முதலியார் வந்து அர்ச்சிக்கின்றாரென்பது சொல்லப்பட்டது: அவர்க்காகத் திருமுகமண்டலவாசல். அந்தப் பாசுரத்திலேயே "அமரராய்த் திரிகின்றார்கட்கு ஆதி" என்கையாலே பிரமன் முதலான தேவர்களும் வந்து அர்ச்சிக்கின்றாரென்பது காட்டப்பட்டது. அவர்கட்காகத் திருநாபிக்கமலவாசல். "படமுடையரவில் பள்ளிபயின்றவன் பாதங்காண நடமினோநமர்களுள்ளீர்" என்று இவ்வுலகத்தவர்கட்கும் ப்ராப்யமென்பது சொல்லப்பட்டது. இவர்கட்காகத் திருவடிவாசல். * பாதங்காண நடப்பார்க்குப் பாதவாசல், உந்திமேல் வந்துதித்த நான்முகனுக்கு நாபிவாசல். "ஸ்வயேண ஸேநாபதிநா நாவேஷு" என்கிறபடியே முகம் நோக்கிப் பேசுமவனை ஸேனாபதியாழ்வானுக்குத் திருமுகவாசல்—என்கிற பொருத்தமும் உணர்க. "ஸஸைந்ய புத்ரசிஷ்யஸாத்யஸித்தபூஸுரார்ச்சநத்துக்கு" என்ற மூலத்தை அந்வயிக்க வேண்டியவிதமாவது—ஸஸைந்யனென்று ஸேனாபதியாழ்வானைச் சொன்னபடி. புத்ரனென்று பிரமனைச் சொன்னபடி. ஶிஷ்யரென்று (பாதங்காண நடமினோவென்று நியமிக்கப்பட்ட) நமர்களைச் சொன்னபடி. இந்த மூன்று பதங்களிலும் "ஸாத்யஸித்தபூஸுர" என்ற மூன்று பதங்களும் அடைவே அந்வயிக்கும். ஸஸைந்யரான ஸேனை முதலியாராகிற ஸாத்யருடைய அர்ச்சனத்திற்கு, புத்ரர்களான ப்ரஹ்மாதிகளாகிற ஸித்தருடைய அர்ச்சனத்திற்கு, ஆழ்வாருடைய (உபதேசங்கேட்ட) சிஷ்யர்களாகிற பூஸுரர்களின் அர்ச்சனத்திற்கு—என்று அந்வயிப்பது. * யத்ர பூர்வே ஸாத்யாஸ்ஸந்தி தேவா: என்கிற வேதவாக்யம் (ஸாத்ய) என்றவிடத்தில் நினைக்கத்தக்கது.

184. மோக்ஷதாநத்தில் ப்ரணத பாரதந்த்ரியம் வளம்மிக்க நதியிலே கரைபுரளும்.

185. த்யாஜ்யதேஹவ்யாமோஹம் மருள்கள்கடியும் மயல்மிகு பொழிலிலே தழைக்கும்.

[திருவாட்டாற்றில் விளங்கும் திருக்குணம்]

184. * அருள்பெறுவாரடியா ரென்கிறதிருவாய்மொழியில் மங்களாசாஸநம் செய்யப்பெற்ற திருவாட்டாற்றில் விளங்கும்குணம்யாதெனில்; கீழேவிவரித்தபடி ஸர்வஸமனை எம்பெருமான் அடியவர்கட்கு மோக்ஷம் தருமளவில் அவர்கள் விதித்தபடி செய்வானாய்நிற்கிற ஆச்ரித பாரதந்திரியம் என்னும் குணமே.

"இன்று விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான்" என்ற பாசுரத்தை நோக்கி "மோக்ஷதாநத்தில்" என்றார். "ஆழியானருள் தருவானமைகின்றான் அது நமது விதிவகையே" என்ற விடத்திற்கு (ஈட்டில்) எம்பெருமானார்நிர்வாஹத்தைநோக்கி "ப்ரணதபாரதந்த்ர்யம்" என்றார். "மண்ணுலகில் வளம் மிக்கவாட்டாற்றான்" என்ற பாசுரத்தில் நோக்காக "வளம்மிக்கநதியிலே" என்றார். ஆறு என்றதற்குப் பொருத்தமாகக் கரைபுரளுமென்றார்.

[திருமாலிருஞ்சோலையில் திகழும் திருக்குணம்.]

185. * செஞ்சொற்கவிகாள்! என்ற திருப்பதிகத்தினால் மங்களாசாஸநம் செய்யப்பெற்ற திருமாலிருஞ்சோலையில் விளங்கும் குணமாவது—மஹிஷியின் உச்சிஷ்டத்தை விரும்பும் ராஜகுமாரனைப்போலே முமுக்ஷுக்களுக்கு த்யாஜ்யமான தேஹத்தில் எம்பெருமானுக்குண்டான வ்யாமோஹ ஶாலித்வமாம்.

"திருமாலிருஞ்சோலை வஞ்சக் கள்வன்மாமாயன்" என்கிறபடியே வஞ்சக்கள்வனாய் * நெஞ்சுமுயிரு முள்கலந்தவனாய், "மாயவாக்கையிதனுள் புக்கு" என்கிறபடியே தேஹதோஷம்பாராமல் உள்ளேபுகுந்தவனாய், "திருமாலிருஞ்சோலைமலையே திருப்பாற்கடலே என்தலையே" என்ற பாசுரத்தின்படியே உகந்தருளின நிலங்களெல்லாவற்றிலும் பண்ணும் விருப்பத்தை இதில் [தேஹத்தில்] ஏகதேசத்திலேபண்ணி "மங்கவொட்டு உன்மாமாயை" என்று கால்கட்டி விடுவிக்க வேண்டும்படி அவனுக்குண்டான வ்யாமோஹம் "த்யாஜ்ய தேஹவ்யாமோஹம்" என்கிறபதத்தினால் காட்டப்பட்டது.

"மருள்கள் கடியும் மயல்மிகுபொழிலிலே" என்றவிது ஆழ்ந்து அறியத்தக்கது. * செஞ்சொற்கவிகாளில் "மருள்கள் கடியும் மணிமலை" என்றுள்ளது: * கிளரொளியிளமையில் "மயல்மிகுபொழில்சூழ்" என்றுள்ளது. மருள்கள்கடியுமென்றது அஜ்ஞானத்தை அடியோடேபோக்குமென்றபடி. மயல்மிகு என்றது அஜ்ஞானத்தை மிகச்செய்யுமென்றபடி. இவையிரண்டும் பரஸ்பரவிருத்தங்களாயினும் ஆச்ரயபேதத்தாலே பொருந்தும்: மருள்கள்கடிவது ஆழ்வார்திறத்திலே; மயல்மிகுவது எம்பெருமான் திறத்திலே. த்யாஜ்யமான

186. அங்கீகரிக்க அவகாசம் பார்க்கும் ஸ்வாமித்வம் பெருநகரிலே பேர் பெற்றது.

187. இவற்றில் ப்ராவண்யம் இவள்பரமே யென்னவுண்டாய் ஷோடச கலாபூர்ணமான சந்த்ரமண்டலம்போலே பதினாறு திருநக்ஷத்ரம் நிரம் பினவாறே தேவபோக்யமானவதில் அம்ருதம்போலன்றிக்கேஎன்றுத்

தேஹத்திலுள்ள தோஷங்களை அறியப்பெறுமையாலே எம்பெருமானுக்கு மயல் மிக்கதென்னலாம்; அவற்றையுள்ளபடியுணர்ந்து உரைத்தருளின ஆழ்வார் மருள்கள்கடியப்பெற்றவரென்னக் குறையில்லை. * களரொளியிளமை நிகமனப் பாசுரத்தில் "மருளில்வண்குருகூர்வண்சடகோபன்" என்றதும் நோக்கத்தக்கது. "தழைக்கும்" என்றது பொழிலென்றதற்குப் பொருந்தியிருக்கும்.

[திருப்பேர் நகரில் விளங்கும் குணம்.]

186. * திருமாலிருஞ்சோலைமலை யென்றேனென்ன என்னுந்திருப்பதிகத்தினால் மங்களாசாஸநஞ் செய்யப்பெற்ற (அப்பக்குடத்தான் ஸந்நிதி என்கிற) திருப்பேர் நகரில் விளங்கும் குணமாவது—தம்மை அங்கீகரிக்கைக்குடலான ஸுக்ருத லேசமில்லாதாரையும் மடிமாங்காயிடுமாபோலே 'என்றானைச் சொன்னாய்' என்றாற்போன்ற அஜ்ஞாதஸுக்ருதங்களை ஆரோபித்தும் அங்கீகரிக்கைக்கு இடம் பார்க்குமவனுடைய ஸ்வாமித்வமாம்.

"திருமாலிருஞ்சோலைமலை யென்றேன், என்னத் திருமால் வந்து என்னெஞ்சு நிறையப் புகுந்தான்" என்ற பாசுரத்தை நோக்கி "அங்கீகரிக்க அவகாசம் பார்க்கும்" என்றார். இவ்வழியாலேயாகிலும் அங்கீகரிக்கப் பார்ப்பது தன்னுடைமையை விடமாட்டாமையினாலாதலால் ஸ்வாமித்வம் என்றது. "பெருவரை மதில்கள் சூழ்ந்த பெருநகர்" என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்தை நோக்கி 'பெருநகரிலே' என்றார். திருப்பேர்நகர் என்றதற்குப் பாங்காக 'பேர்பெற்றது' என்றார்.—ஆக இவ்வளவாலும் இன்ன இன்ன திருப்பதியிலே இன்ன இன்ன குணம் விளங்குமென்று ரூதலித்தாராயிற்று.

[இத்திருப்பதிகளில் ப்ராவண்யம் ஆழ்வார்க்கு உண்டானது எப்போது?
இவர் தாம் ஸ்ரீஸூக்தியருளிச்செய்யத் தொடங்கினது எத்தனை பிராயத்திலே?
இவர் ஸ்ரீஸூக்திகளுக்கு போக்தாக்கள் யார்?
போக்யதை யிருக்கும்படி யாது? என்னும் வினாக்களுக்கு விடையிறுத்தல்.]

187. இவற்றில் ப்ராவண்யம்—கீழ்க்கூறிய அர்ச்சாவதாரஸ்தலங்களில் ஊற்றம் (எப்போது உண்டாயிற்றென்னில்;) இவள் பரமேயென்ன உண்டாய்—"முலையோ முழுமுற்றும் போந்தில, மொய்பூங்குழல் குறிய, கலையோ வரையில்லை, நாவோ குழறும், பெருமான் மலையோ திருவேங்கடமென்று கற்கின்ற வாசகம்—இவள் பரமே. "(திருவிருத்தம்) என்னும்படி பருவம் நிரம்புவதற்கு முன்னே [மிக்க இளம்பிராயத்திலே] உண்டாயிற்றென்க.

தமிழரிசைகாரர் முதற்பத்தர் வானவரென்னம்மான் பார்பரவென்னும் படி ஸேச்வரவிபூதி ஹ்ருத்யமான பாலோடமுதன்ன மென்மொழி முகஞ்செய்தது.

இனி ப்ரபந்தமருளிச்செய்யத் தொடங்கினது எத்தனை திருநக்ஷத்திரத்தளவிலென்னில்; ஷோடசகலா பூர்ணமான சந்த்ரமண்டலம் போலே பதினாறு திருநக்ஷத்ரம் நிரம்பினவாறே= பதினாறுகலைகளாலும் பரிபூர்ணமான சந்திர மண்டலம் போலே பதினாறு திருநக்ஷத்ரம் நிரம்பின பின்பு என்க.

இவரருளிய ஸ்ரீஸூக்திகளுக்கு போக்தாக்கள் இன்னாரென்கிற நியமமுண்டோவென்னில், தேவ ஹ்ருத்யமானவதிலம்ருதம் போலன்றிக்கே—அந்த சந்திர மண்டலத்தில் அமிருதம் தேவர்களுக்கு ஹ்ருத்யமாகையாலே போக்த்ரு நியமமுடைத்தாயிருப்பது போலன்று இது என்க. பின்னை இதற்கு அநுபோக்தாக்கள் யாவர்? என்னில், அருளிச்செய்கிற ஆழ்வார்தாமும், கற்பவர்களான ஸம்ஸாரிகளும் கேட்பவர்களான நித்யஸூரிகளும், பாட்டுண்பவனான ஸர்வேச்வரனுமாக உபயவிபூதியும் உபயவிபூதிநாதனும் அநுபோக்தாக்கள் என்பது ஆழ்வார் பாசுரங்களினாலேயே தெரியவருகின்றது: எங்ஙனேயென்னில்;

[என்றுத்தமிழரிசைகாரர் இத்யாதி.] "என்னாவில்இன்கவி" என்கையாலே அருளிச்செய்கிறஆழ்வார்க்கும் போக்யமென்பது அறியலாயிற்று. "பாலேய்தமிழரிசைகாரர் பத்தர்பரவுமாயிரம்" என்றும் "தாமுதற் பத்தர்க்குத்தான் தன்னைச்சொன்ன" என்றும் சொல்லுகையாலே கற்குமவர்களுக்கு போக்யமென்பது அறியலாயிற்று. "கேட்டு ஆரார்வானவர்கள் செவிக்கினிய செஞ்சொல்லே" என்கையாலே நித்யமுக்தர்களுக்கும் போக்யமென்பது உணரலாயிற்று. "பண்ணார்பாடலின்கவிகள் யானாய்த் தன்னைத்தான் பாடித் தென்னாவென்னு மென்னம்மான்" என்கையாலே ஸர்வேச்வரனுக்கும் போக்யமென்பது பெறப்பட்டது. கிம்பஹுநா? "ஏர்விலாவென்னைத் தன்னாக்கி யென்னால்தன்னைப் பார்பரவின்கவி பாடும்பரமரே" என்கையாலே பார்முழுதும் அநுபவிக்கைக்கு யோக்யமானதென்பது பெறப்பட்டது. ஆக, ஆழ்வாரருளிச்செயல் ஸேச்வரவிபூதி போக்யமென்றதாயிற்று. (மூலத்தில்யோக்யமான என்றபாடத்திற்காட்டிலும் "ஹ்ருத்யமான" என்றபாடமே வியாக்கியானத்திற்கு நன்குபொருந்தும்; "புஜிக்கைக்கு யோக்யமாய்" என்று மணவாள மாமுனிகள் அருளிச்செய்திருக்கையாலே.

இனி, ஆழ்வாரருளிச்செயலின் போக்யதை இருக்கும்படிதான் எங்ஙனே யென்னில்; [பாலோடமுதன்னமென்மொழி] குணக்கடலான எம்பெருமான் வாச்யனாகவும் மிகச்சிறந்த இவவருளிச்செயல் வாசகமாகவும் அமைந்த அமைப்பினாலே பாலும் அமுதமும் ஒன்று சேர்ந்தாற்போலே யிருக்குமென்பது "பாலோடமுதன்னவாயிரம்" என்பதனால் விளங்கும். போக்யதையின் மிகுதியாலும் புஜித்தார்க்கு நித்யத்வத்தைத் தருகையாலும் அமுதம்

188. நீர்பால் நெய்யமுதாய் நிரம்பின வேரி நெளிக்கு மாபோலே பரபக்த்யாதிமய ஜ்ஞாநாம்ருதாப்தி நிமிகிற வாய்கரை மிடைந்து மொழிபட்டு அவாவிலந்தாதி யென்று பேர்பற்றது

போலேயாய், அந்த அமுதத்திற்காட்டில் விலக்ஷணமாக ஸௌகுமார்யத்தையுடையது அருளிச்செயல்—என்பது "அமுதமென் மொழியாளை" என்றபாசுரத்தினால் விளங்கும். ஆகவே "பாலோடமுதன்ன வாயிரம்" "அமுதமென் மொழியாளை" என்ற இரண்டு பாசுரங்களும் திருவாய்மொழியின் போக்யதையிருக்கும்படியை விளக்குவன என்றதாயிற்று. இப்படிப்பட்ட திருவாய்மொழி ஆழ்வாருடைய திருவாக்கில் நின்றும் திருவவதரித்தது பதினாறு பிராயம் நிரம்பின பின்பு. [முகஞ்செய்தது—முகத்தில் நின்றும் வெளிவந்தது.]

[இங்ஙனே நாம் அவனைக் கவிபாடவேணுமென்று ஆழ்வார் ஸங்கல்பித்திருந்து பாடினாரல்லர் என்று நிருபித்தல்.]

188. திருவாய்மொழி அவதரித்த க்ரமம் வெளியிடப்படுகிறது. நீர்பாலாய், பால் நெய்யாய், நெய் அமிருதமாய் அத்தாலே நிரம்பின ஓர் ஏரியாக ஆழ்வாரைக் கொள்ளவேண்டும். "மயர்வற மதிநலமருளினன்" என்கிற விடத்தில் கர்மஜ்ஞாநாநுக்ருஹீதையான பக்தியின் ஸ்தானத்திலே பகவத்ப்ரஸாதமாய் அது அடியாகப் பரபக்தி தொடங்கிப் பிறக்கையாலே, ஞானம் முதலிலே பரபக்தி ரூபமாய் பரபக்தியானது பரஜ்ஞானமாய், பரஜ்ஞானமானது பரமபக்தியாய் முதிர்ந்தபடியை நோக்குங்கால், நீர்பால் நெய்யமுதாய் நிரம்பின ஏரியாகவே ஆழ்வார் கொள்ளத் தகுந்தவராவர். [நீரின் ஸ்தானத்தில் ஞானம்; பாலின் ஸ்தானத்தில் பரபக்தி; நெய்யின் ஸ்தானத்தில் பரஜ்ஞானம்; அமுதின் ஸ்தானத்திலே பரமபக்தி என்று காண்க.]

நிரம்பின ஏரி தரித்திருக்கமாட்டாமல் நெளித்து உடைந்துபோம்; அது போலவே ஆழ்வாராகிற ஏரியும் உடையத்தொடங்கிற்று. "ஸ்வ...தத்வஜ்ஞாநாம்ருதாப்தி பரிவாஹ ஶுபைர் வசோபி:—அச்யுதபக்தி தத்வஜ்ஞாநாம்ருதாப்தி பரிவாஹசுபைர் வசோபி:" என்னுமாபோலே அந்த பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளாய்க் கொண்டு நிரம்பின ஞானவமுதக் கடலான ஆழ்வார் தாம் தரிப்பதற்காக [அதாவது ஆச்ரயம் அழியாமைக்காக] ப்பரீவாஹாபேக்ஷை பிறந்து வாய்கரை நெளியத் தொடங்கிற்றென்பது "நிமியும் வாயொடு கண்கள் நீர்மல்க நெக்கொசிந்து கரையுமே" என்ற பாசுரத்தினால் விளங்கும். அங்ஙனம் நெளிகிற வாய்கரைபாலே அருளிச்செயல் அவதரிக்க ஆரம்பித்தது. [மிடைந்து மொழிபட்டு அவாவிலந்தாதி யென்று பேர் பெற்றது.] சொற்களானவை நாம் இங்குத்தைக்குக் கிஞ்சித்கரித்தோமாக வேணுமென்று, என்னைக் கொள் என்னைக் கொள் என்று மேல் விழுகையாலே "மிடைந்த சொல் தொடையாயிரம்" என்று ஆழ்வார் தாமே அருளிச் செய்யும்படியாயிற்று. உள்ளே தேங்கியிருக்கின்ற அம்ருதவெள்ளமே ஸ்ரீஸூக்தி ரூபமாகப் பெருக்கா

189. மனஞ்செய் எல்லையில் ஞான வின்பத்தை நின்மலமாக வைத்தவர்

றெடுத்து வந்ததென்பது "மொழிபட்டோடுங் கவியமுதம்" என்ற பாசுரத்தினால் விளங்கிற்று. இங்ஙனம் பரபக்தி முதலிய மூன்று நிலைமையைப் பெற்ற பக்தியினால் தூண்டப்பட்டுத் திருவாய்மொழி அவதரித்ததென்பது "அவாவிலந்தாதிகளால் இவையாயிரமும்" என்ற பாசுரத்தினால் விளங்கும். ஆகவே பக்திபலாத்காரத்தாலே பிறந்த அந்தாதியான ஆயிரமென்று நிருபகமாம்படியாயிற்று என்றவாறு. இத்தால்—ஆழ்வார் நாம் அவனைக் கவிபாடவேணுமென்று ஸங்கல்பித்திருந்து பாடினாரல்லர்; பக்திபலாத்காரத்தாலே அவதரித்ததத்தனை என்று நிரூபித்ததாயிற்று.

[திருவாய்மொழி கீதோபநிஷத்தோடொக்கு மென்று பொருளொற்றுமைகளினால் நிருபித்தல்.]

189. திருவாய்மொழியின் பொருள்களை இனிவிரிவாக வெளியிடத் திருவுள்ளம்பற்றி முந்துற முன்னம்—பகவத் தத்வத்தைக் கையிலங்கு நெல்லிக்கனியாக ஸாக்ஷாத்கரித்த ஆழ்வார் ஸம்ஸாரிகளுக்கு உஜ்ஜீவனமான அர்த்த விசேஷங்களை உபதேசம்பண்ணினதான இத்திருவாய்மொழியானது ஶ்ருதி வாக்யங்களான அர்த்தங்களின் ஸாம்யத்தாலே கீதோபநிஷத்துக்கு ஸமமாகச் சொல்லப்படுமென்கிறார்.— [மனஞ்செய் எல்லையில் ஞானவின்பத்தை நின்மலமாகவைத்தவர்] பிறர்க்கு உபதேசிப்பதற்கான யோக்யதையில் ஆழ்வார் குறையற்றவர் என்பதற்காக இது சொல்லுகிறது. ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனை ஸர்வேச்வரனைத் திருவுள்ளத்தினுள்ளே மிகவிசதமாக அநுபவித்து ஸாக்ஷாத்கரித்தவர் ஆழ்வார் என்று இதனால் காட்டப்படுகிறது. மனஞ்செய் எல்லையில் ஞானவின்பத்தை என்றது ஸர்வேச்வரனை என்றபடி. எங்ஙனேயென்னில்; "நினைந்த வெல்லாப்பொருள்கட்கும் வித்தாய் முதலிற்சிதையாமே மனஞ்செய்ஞானத்துன் பெருமை" என்ற பாசுரத்தினால் 'ஸர்வ காரணமாய் அபரிச்சேத்யமான ஸங்கல்ப ரூபஜ்ஞானத்தை யுடையவன் எம்பெருமான்' என்பது சொல்லப்படுகிறது. "எல்லையில் ஞானத்தன் ஞானமஃதேகொண்டெல்லாக் கருமங்களுஞ் செய்" என்றபாசுரத்தினாலும் அதுவே சொல்லப்படுகிறது. "சூழ்ந்ததனிற்பெரியசுடர் ஞானவின்பம்" என்ற பாசுரத்தினால் ப்ரக்ருதிபுருஷ தத்வங்களிரண்டும் தனக்குள்ளேயாம்படி வியாபித்து, அபரிச்சேத்யமாய் உஜ்ஜ்வலமாய் ஜ்ஞாநாநந்த லக்ஷணமாயிருக்கிற ஸ்வரூபத்தையுடையவன் எம்பெருமான்—என்று சொல்லப்படுகிறது. ஆக, திருவாய்மொழியில் ஆதி மத்ய அவஸானங்களிலுள்ள மேற்குறித்த மூன்று பாசுரங்களினால் எம்பெருமானுடைய ஸ்வரூபத்தை ஆழ்வார் தாம் நன்குணர்ந்தவர் என்பது பெறப்பட்டது. இப்படிப்பட்ட எம்பெருமானை ஆழ்வார் தம்திருவுள்ளத்திலே நிர்மலமாக வைத்து ஸாக்ஷாத்கரித்தவர் என்பது "அறிந்தறிந்து தேறித்தேறி யானெனதாவியுள்ளே, நிறைந்தஞானமூர்த்தியாயை நின்மலமாகவைத்து—நானுன்னைக் கண்டுகொண்டே" என்ற பாசுரத்தினால்

விளங்கும். ஆக "மனஞ்செய்.........நின்மலமாகவைத்தவர்" என்ற வளவால், ஆழ்வார் பரோபதேசம் செய்யப்போதுமான ஆற்றலுடையவரே, அர்ஜுநனுக்கு உபதேசித்த கீதாசார்யனில் குறைந்தாரல்லர் என்பது ஸாதிக்கப்பட்டதாயிற்று.

[ஞானப்பிரானை ஞானத்து வைம்மினென்றவிது] தாம் அறுதியிட்ட விலக்ஷணமான அர்த்தத்தையே உஜ்ஜீவநாபேக்ஷிகளான பிறர்க்கும் உபதேசிப்பதற்கே திருவாய்மொழி அவதரித்தது என்பது இந்த வாக்கியத்தினால் காட்டப்படுகிறது. பிரளயக்கடலில் மூழ்கிப்போன பூமியை மஹாவராஹமாய் உத்தரித்த ஜ்ஞாந ஶக்திகளையுடையவனும், வராஹசரமச்லோகங்களிரண்டின் உபதேசமுகத்தாலே ஜ்ஞாநோபகாரகனுமாயிருக்கும் எம்பெருமானையன்றி அனைவர்க்கும் உஜ்ஜீவந ஹேதுவாயிருப்பது வேறொன்றில்லை என்று தாம் அறுதியிட்டபடியை முதல் பிரபந்தமான திருவிருத்தத்தில் "இருங்கற்பகஞ்சேர் வானத்தவர்க்கு மல்லாதவர்க்கும் மற்றெல்லாயவர்க்கும்—எழிநிரைவையம் மூற்றும் ஏனத்துருவாயிடந்த—ஞானப்பிரானையல்லாலில்லை நான் கண்ட நல்லது" என்ற பாசுரம் வெளியிடுகின்றது.

பரோபதேசபரங்களான ஸூக்திகள் திருவாய்மொழியில் பலபல இருந்தாலும் இங்கு ஒரு பாசுரமே ஸார்பிதமாக எடுத்துக்காட்டப்படுகிறது—"திருக்குருகூரதனை உளங்கொள் ஞானத்துவைம்மின் உம்மையுய்யக்கொண்டு போகுறிலே" என்ற பாசுரத்தையுட்கொண்டு "ஞானத்து வைம்மினென்றவிது" என்றருளிச்செய்தார். ஆழ்வாரோ ஒரு ஞானி; அவர் தாம் சிந்தை செய்ததோ நிறைந்த ஞானமூர்த்தி; தாம் கண்டுகொண்டதும் ஞானப்பிரான்; பிறர்க்கு உபதேசித்ததும் ஞானத்து வைம்மினென்றே என்று இங்கெடுத்த சந்தைகளெல்லாம் ஞானமயமாகவே அமைந்த அழகு ஆராயத்தக்கது. "ஞானத்து வைம்மினென்றவிது" என்றது உபதேசபரமான இந்தத் திருவாய்மொழியானது என்றபடி; இதற்கு 'கீதாஸமம்' என்பதோடே அந்வயம். இதற்குமேல் "தத்வவிவேக" என்று தொடங்கி கீதோபநிஷத்தில் பிரதிபாதித்த அர்த்தங்களுக்கும் திருவாய்மொழியிலருளிய அர்த்தங்களுக்கும் ஒற்றுமை காட்டப்படுகிறது.

தர்மஸ்தாபநார்த்தமாக அவதரித்தருளின கண்ணபிரான், அஸ்தாந ஸ்நேஹ காருண்யங்களாலே கலங்கி யுத்தஞ் செய்யமாட்டேனென்று கையொழிந்து நன்மையை யுணர்த்துமாறு அடிபணிந்து நின்ற அர்ஜுநனைத் தெளிவித்து யுத்தத்தில் மூட்டுகை வியாஜமாக "அறிவினால் குறைவில்லா அகன்ஞாலத்தவரறிய நெறியெல்லா மெடுத்துரைத்த" என்கிறபடியே உலகுக்கு உஜ்ஜீவந ஶாஸ்த்ரமாம்படி எல்லாப்பொருள்களையும் விவரித்த கீதையில் முந்துறமுன்னம் தேஹாத்மாபிமாந கார்யமான பந்து ஸ்நேஹத்தையும் வ்யஸநித்தையும் மாற்றுகைக்காகத் தத்வ ஜ்ஞானத்தை யுபதேசிக்கத் தொடங்கினவளவிலே தத்வவிவேகத்தை மூன்றுபடியாக உண்டாக்கி யருளினன்: எங்ஙனே யென்னில்;